வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

வீர மலர்

Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 304 பக்கங்கள் : 20



07 சோழர்கள் இந்துக்களா? ராஜராஜ சோழன் இந்துவா?



08 22 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் படும்பாடு!



10 அலி சப்றியின் 'விசுவாச' அரசியலும், ரணிலின் அசாதாரண மௌனமும்!



16 தலிபான்களால் தொடரப்படும் இனப்படு கொலை!



# ஐ.நாவும் சர்வதேச சமூகமும் இலங்கைக்கு இனியும் கால அவகாசம் வழங்கக்கூடாது

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கோரிக்கை

*கொழும்பு, ஒக். 09*

*"ஐ.நா. தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளையும், சர்வதேசத்துக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு ஐ.நாவும், பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிடுத்து இலங்கை அரசுக்குத் தொடர்ந்து கால அவகாசம் வழங்கி வந்தால் அதில் எந்தப் பயனும் கிடையாது."*

*- இவ்வாறு தமிழ்த் தேசியக்*

19

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்பில் உள்ளோர் விவரம் வேண்டும்!

## தகவலறியும் உரிமை ஆணைக்குழு பொலிஸாருக்கு அவசர உத்தரவு

**கொழும்பு, ஒக்ரோபர் 09**

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை வெளியிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

19

## ஜனாதிபதி ரணிலுக்கு தொடர்ந்தும் ஆதரவு!

### மகிந்த அதிரடி அறிவிப்பு

*கொழும்பு, ஒக். 09*

*நாட்டை முன்னேற்றுவதற்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்தும் இருக்கும் என, முன்னாள் ஜனாதிபதி மகிந்த*

19



வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திரு விழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதில் பங்கேற்றனர். (அ)

## வசந்த முதலிகே கொல்லப்படுவார்

### ஆதிவாசி தலைவருக்கு கிடைத்த கடிதம்

*கொழும்பு, ஒக்.09*

*அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கொல்லப்படவுள்ளதாக ஆதிவாசிகளின்*

19

## எச்.ஐ.வி. பரிசோதனை நிறுத்தப்படும் நிலை!

*கொழும்பு, ஒக். 09*

*பரிசோதனைக் கருவிகள் இல்லாததால் எச்.ஐ.வி தொற்றாளர்களை அடையாளம் காணும் பரிசோதனைகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தாதியர்*

19

## எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது!

*கொழும்பு, ஒக். 09*

*சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டாலும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.*

*தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.*

19

# சர்வதேச ஒத்துழைப்பின்றி எம்மால் முன்னேறமுடியாது

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

*கொழும்பு, ஒக். 09*

*ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் ஒத்துழைப்புக்களின்றி எம்மால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. எனினும், ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை சர்வதேசத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய உதவிகளில் பாதகமான தாக்கத்தைச் செலுத்தும் என்று ஐக்கிய மக்கள்*

19

## இப்படியும் நடக்கிறது...!

திருகோணமலையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா, செயற்பட முடியாத தலைவராக இருப்பதாகவும், அதனால் திருமலையில் தமிழர் விரோத நடவடிக்கைகள் வேகமாக நடந்து வருவதாகவும் திருமலையிலிருந்து சென்ற குழு ஒன்று தமிழரசின் மத்திய குழுக்கூட்டத்தில் போர்க் கொடி தூக்கியிருந்தது பழைய சங்கதிதான்.

அதனைத் தொடந்து நால்வர் குழு ஒன்று இதுதொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு திருகோணமலைக்கு நேரடியாக சென்று களநிலைமையை ஆராய்ந்ததும் செய்திகளாக வெளிவந்திருந்தன.

அந்தக் குழு திருகோணமலை சென்றிருந்தபோது, சம்பந்தன் ஐயாவை பதிவிவிலகுமாறு தாம் கேட்கவில்லை என்றும், தேசியப்பட்டியல் எம்.பி.பதவியை முன்னர் உறுதியளித்தவாறு பங்கிட்டு தருமாறே தாம் கோரியதாகவும் திருமலை சிவில் சமூக பிரதிநிதிகள் தெரிவித்ததாக அந்தச் செய்திகள் விபரித்திருந்தன.

தேர்தலுக்கு முன்னதாக இரண்டு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தால், அதில் ஒன்றை திருகோணமலைக்கு வழங்க வேண்டும் என்று சம்பந்தன் ஐயா வலியுறுத்தியிருந்ததாக அப்போது கூறப்பட்டவை செய்திகளாகவும் வெளிவந்திருந்தன. 2015 தேர்தலிலும் அவ்வாறு இரண்டாவது தேசியப் பட்டியல் எம்.பி. பதவி திருகோணமலையின் துரைரெட்ணசிங்கத்திற்கே வழங்கப்பட்டிருந்தது.

அவர் காலத்தில் திருகோணமலையில் தமிழர்களுக்கு விரோதமான எந்தச் சம்பவமும் நடக்கவில்லையா என்ற கேள்வி எழுவது வேறு விடயம்.

ஆனால் அதுபோலவே, இருபதாம் ஆண்டுத் தேர்தலிலும் இரண்டாவது தேசியப்பட்டியல் எம்.பி. பதவி திருமலைக்கு வழங்கவேண்டும் என்று சம்பந்தன் ஐயா கோரியிருந்தபோதிலும் தேர்தலில் ஒரேயொரு ஆசனமே கிடைத்திருந்ததால், அம்பாறைக்கு அந்த பதவி வழங்கப்பட்டது.

அது வழங்கப்பட்ட முறை பற்றி விபரிப்பதெனில் அதற்கு இந்தப் பத்தி போதுமானதல்ல. அதுவல்ல இப்போது நாம் சொல்ல வருவது.

கடந்த தேர்தலில் ஒரு தேசியப்பட்டியலே கிடைத்ததால் அதனை இரண்டாக பங்கு போடவேண்டும் என்றும், அதாவது ஐந்து ஆண்டுகளில் முதல் இரண்டரை ஆண்டுகள் அம்பாறைக்கும் மிகுதி இரண்டரை ஆண்டுகளையும் திருகோணமலைக்கும் வழங்கவேண்டும் என்றும் திருமலை தமிழரசுக் காரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். நியாமான கோரிக்கை தான்.

அதனை பெருந்தலைவர் சம்பந்தனிடம் எடுத்துச்சொல்லி அவரின் அனுமதியைப் பெறுவதென்று நால்வர் குழு தீர்மானித்திருந்தது. ஆனால் அப்படி அந்தக் குழு பின்னர் குழுவாக சம்பந்தனைச் சந்தித்ததாக எங்கும் செய்திகள் வெளிவரவில்லை.

ஆனால், பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டத்தை அம்பாந்தோட்டையில் முடித்து வைக்கும் வைபவத்தில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்த கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் குழுவின் மற்றொரு உறுப்பினரான சுமந்திரனும் சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் சந்தித்திருந்தனர்.

இந்த விடயமாக அவர்கள் பேசினார்களா என்பது தெரியவில்லை. ஆனால், அந்த விடயம் குறித்த தமது அதிருப்தியை சம்பந்தன் அப்போது வெளிப்படுத்தியதாக நம்பகமாக தெரியவந்தது.

திருகோணமலையில் இன்று நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வுகாணவேண்டியவர் அந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியான சம்பந்தன் தான் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

கடந்த தேர்தலில் அவர் போட்டியிடுவதில்லை என்றும் அவர் தேசியப்பட்டியல் ஊடாகவே பாராளுமன்றம் செல்வதென்றுமே முன்னர் முடிவாகி இருந்தது. ஆனால் திருமலை களநிலைமைகளை கருத்தில் கொண்டே சம்பந்தன் தேர்தலில் போட்டியிட முடிவானது. அதனால்தான் திருமலை குகதாசன் திருமலையில் போட்டியிட்டாலும் இரண்டு பேர் வெற்றிபெற முடியாது என்பதால் குகதாசனுக்கு தேசியப்பட்டியலில் இடம் கொடுக்கவேண்டும் என்று சம்பந்தனே கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், சம்பந்தன் வெற்றி பெற்றாலும் அவரால் தனது மாவட்டத்திற்கான தேவைகளை தன்னால் நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை கவனிப்பது கடினமானது என்பதை அவரே அறிந்துகொண்டதால்தானே, குகதாசனுக்கு அந்த தேசியப்பட்டியலில் சம்பந்தன் இடம் கேட்டார். அவர் வெற்றி பெறவேண்டும் என்பதுதான் மாவட்ட தமிழர்களின் விருப்பமாக இருந்ததே தவிர, அவர் தமது மாவட்டத்திற்கு சேவை செய்வார் என்ற எதிர்பார்ப்பு இருக்கவில்லையே.

இந்நிலையில் அவர் மீது குற்றம்சாட்டுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஆனால், தனது மாவட்டம் தொடர்பான பிரச்சினையை தன்னிடமே நேரில் வந்து சொல்லாமல், தமிழரசின் மத்தியகுழுவிடம் முறையிட்டதில் சம்பந்தன் கடும் கோபத்தில் இருப்பதாக மட்டும் அவரைச் சந்தித்தவர்களால் அறிய முடிந்திருக்கும்.

இதனால்தான் அந்த விடயம் அப்படியே அடங்கிவிட்டது.!

தற்போதைய தேசியப்பட்டியல் எம்.பி.வேறு, பதவியை விட்டுக்கொடுப்பதில்லை என்பதிலும் உறுதியாக இருக்கின்றார் என்பது மற்றுமொரு கொசுறுத் தகவல்.

- ஊர்க்குருவி

## ஓய்வூதிய திட்டத்தை மாற்றவேண்டாம்!

### மருத்துவ நிபுணர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 09

அரச துறையில் ஓய்வு பெறும் வயதை 60 ஆக குறைக்கும் பிரேரணையை மாற்ற வேண்டாம் என சுகாதார அமைச்சின் வைத்திய நிபுணர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மருத்துவ நிபுணர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆகக் குறைப்பது, இந்த நடவடிக்கைக்கு எதிரான பரப்புரைக் குழுவால் கூறப்படும் சுகாதார சேவை அல்லது முதுகலை மருத்துவக் கல்விக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என சுகாதார அமைச்சின் மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றனர்.

சுமார் 250 மருத்துவ நிபுணர்கள் ஓய்வு பெறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டாலும், அவர்களுக்குப் பதிலாக நியாயமான எண்ணிக்கையிலான நிபுணர்கள் இருப்பார்கள் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டுப் பயிற்சியை முடித்துவிட்டு அண்மையில் நாடு திரும்பிய 200 நிபுணர்களும், வெளிநாட்டுப் பயிற்சியை முடித்து அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நாட்டிற்கு வரவிருக்கும் 525 நிபுணர்களும், உள்ளூர் முதுகலை சிறப்புப் பயிற்சியை முடித்த 300 பயிற்சியாளர்களும் இதில் அடங்குவர்.

ஓய்வு பெறவுள்ள 250 மருத்துவ நிபுணர்களில் பெரும்பான்மையானவர்கள் தற்போது நாட்டில் போதுமான நிபுணர்கள் உள்ள துணை சிறப்புத் துறைகளைச் சேர்ந்தவர்கள் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏதேனும் விசேட துறையில் பற்றாக்குறை இருந்தால், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏற்பாடு உள்ளது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

புதிய திறன்கள் மற்றும் அறிவு கொண்ட இளைய தலைமுறையினர் நோயாளி பராமரிப்பு மற்றும் முதுகலை பயிற்சியின் அடிப்படையில் ஒரு சிறந்த மற்றும் திறமையான சேவையை வழங்க முடியும் என அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (அ)

## ஊட்டச்சத்துக்கான விசேட செயலணியை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 09

ஊட்டச்சத்துக்கான விசேட செயலணியொன்றை நிறுவ சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இந்த செயலணியை நியமிக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பணிப்புரை விடுத்துள்ளார்.

ஊட்டச்சத்து தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் பல வைத்தியர்கள் மற்றும் மருத்துவ போஷாக்கு நிபுணர்களுடன் இடம்பெற்றது.

இந்த பணிக்குழுவில் ஊட்டச்சத்து துறையில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள் குழுவும்அடங்கும்.

அதன்படி, 2022-2024 அவசர போஷாக்கு திட்டம் நாடு முழுவதும் வயது உட்பட பல்வேறு பிரிவுகளின் அடிப்படையில் கீழ் செயற்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் முதலில்



அடுத்த வாரம் ஒரு மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டு நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

(அ)

## கஞ்சிகுடிச்சாறு மக்களுக்கு காணி ஆவணம்!

அம்பாறை, ஒக். 09

திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கஞ்சிகுடிச்சாறு கிராமத்தை சேர்ந்த 75 பேருக்கு காணி ஆவணப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு ,திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் திருக் கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு கிராமத்தில் காணிஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர் செய்யும் மக்களுக்கு இவ் காணி ஆவணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் காணி ஆவணம் வழங்கும் திட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலகம் முன்னணியில் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

(அ)

## வெள்ளை ஈ தாக்கத்தால் செவ்விளநீர் தட்டுப்பாடு!

கொழும்பு, ஒக். 09

'வெள்ளை ஈ' என்ற பூச்சியால் செவ்விளநீர் அதிகம் பாதிக்கப்படுவதால், டிசம்பர் மாதத்துக்குள் இலங்கையில் செவ்விளநீருக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னந்தோப்புகளில் பரவும் வெள்ளை ஈ பூச்சி செவ்விளநீர் குலைகளின் மஞ்சள் நிறத்தில் ஈர்க்கப்படுவதால் இவற்றை அதிகளவில் பாதித்துள்ளது.

இம்முறை பெரும்பாலும் செவ்விளநீர் ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்டு பயிரிடப்படுகிறது. பெரும்பாலான செவ்விளநீர் காய்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டு, 95 லட்சம் செவ்விளநீர் காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு வெள்ளை ஈ



பாதிப்பு பரவி வருவதால், எதிர்காலத்தில் செவ்விளநீர் ஏற்றுமதிச் சந்தையும் பாதிக்கப்படலாம்.

இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந் தோப்புகள் வெள்ளை ஈ தாக்குதலால் சேதமடைந்துள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நயனி ஆராச்சிகே தெரிவித்துள்ளார். இருப்பினும், வெள்ளை ஈயை அழிக்கக்கூடிய பூச்சிகொல்லி அல்லது பிற பூச்சிகள் இது வரை கண்டறியப்படவில்லை. (அ)

## நாளை விசேட வங்கி விடுமுறை

கொழும்பு, ஒக். 09

நாளை திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2022ஆம் ஆண்டுக்கான வங்கி விடுமுறை நாட்களைக் காட்டும் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் ஒக்ரோபர் 9 ஞாயிற்றுக்கிழமை. அன்றைய தினம் பொது, வங்கி மற்றும் வர்த்தக விடுமுறையாகும்.

இதையடுத்து நாளை திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் பதிவு படிவங்களை நிரப்பி கொடுக்க வேண்டாம்

## கொழும்பு மாநகர மக்களுக்கு மனோ அறிவித்தல்

கொழும்பு, ஒக். 09

“கொழும்பில் பொலிஸ் பதிவு படிவங்களை நிரப்பி கொடுக்க வேண்டாம்.” - என்று கொழும்பு மாநகர மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி உட்பட கொழும்பு மாநகர மற்றும் மாவட்ட பொலிஸ் நிலையங்களினால், வீடு வீடாக கொண்டு வரப்படுவதாக கூறப்படும் பொலிஸ் பதிவு படிவங்களை நிரப்பி கொடுக்கவேண்டாம். இது பற்றி சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் விக்கிரமரத்ன ஆகியோருக்கு அறிவித்துள்ளேன். அவர்களும் இதை ஏற்றுக் கொண்டு உடன் நிறுத்துவதாக எனக்கு உறுதி அளித்துள்ளனர். ஜனாதிபதியின் பிரதம செயலாளர் சமன் இதுபற்றி பொறுப்பில் உள்ள சகலருக்கும் அறிவிப்பதாக எனக்கு உறுதி அளித்துள்ளார்.

“பொலிஸூக்கு அல்ல, எந்த ஒரு அரசு நிறுவனத்துக்கும், தனிப்பட்ட வீட்டு தகவல்களை கொடுக்க நாம் விரும்ப மாட்டோம். கொடுத்தால் அது எங்கெங்கு போகும் என எனக்கு தெரியும். மேலும் இது ஒரு பொலிஸ் ராஜ்யம் அல்ல. பொலிஸ் சட்டத்தில் பதிவு செய்ய இடம் இருக்கிறது. அது எனக்கு தெரியும். ஆனால், அதை விசேட அவசர



காலங்களிலேயே பயன்படுத்த வேண்டும். எங்காவது சட்டத்தை மீறுபவர்கள் இருப்பார்கள் எனில் அவர்களை அடையாளம் கண்டு கைது செய்யுங்கள். விசாரியுங்கள்.

அதில் எனக்கு மாறுபட்ட கருத்தது இல்லை. ஆனால், பொதுவாக வீடு வீடாக போக வேண்டாம். இன்று போர் நடைபெறுகின்ற, சட்ட விரோத ஆயுத அமைப்புகள் செயற்படுகின்ற அவசர காலங்கள் அல்ல. போர் காலத்திலும் நான் இங்கே தான் இருந்துள்ளேன். அந்த காலத்திலேயே இதை பொறுத்துக்கொள்ளாதவன், நான். இன்று இந்த சமாதான காலத்தில் இந்த பொலிஸ் படிவங்களை வீடு வீடாக கொண்டு சென்று பதிவு செய்வதா? உடன் நிறுத்துங்கள்!”, என சம்பந்தபட்ட அரசியல், மற்றும் நிர்வாக தரப்பினரிடம் நான் கூறியுள்ளேன்.

“அரகல”காரர்களை கொழும்பில் வீடு வீடாக தேடுவதாக ஒரு பொலிஸ் நிலைய அதிகாரி என்னிடம் சொன்னார். அவருக்கு நான் என்ன பதில் கூறினேன் என்பதை பகிரங்கமாக கூற முடியாது. அரகலையை வெள்ளவத்தை, பம்பலபிட்டியில் தேட வேண்டாம் எனவும் இவருக்கு கூறினேன். அதை எங்கே தேட வேண்டும் எனவும் கூறினேன்.

கொழும்பில் எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் இத்தகைய நடவடிக்கை தொடருமானால், அவற்றை உடன் என் கவனத்துக்கு கொண்டு வாருங்கள் என ஊடகங்களை கோருகிறேன். நமது மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பரமேஸ்வரன் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வாருங்கள். நாம் உடன் நடவடிக்கை எடுப்போம்.

இதுபற்றி, பொலிஸ் ஆணைக்குழு தலைவர் சந்திரா பெர்னாண்டோ, கொழும்பு பிரதி பொலிஸ் மாதிபர் சந்திரக்குமார, வெள்ளவத்தை பொறுப்பதிகாரி பிரசாந்த சில்வா, பம்பலபிட்டி பொறுப்பதிகாரி பத்மலால் ஆகியோருக்கும் அறிவித்துள்ளேன்- என்றார். (அ)

# இளம் பெண்ணிடம் சேட்டை; இளைஞன் மீது கத்திக்குத்து!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஒக. 09

வவுனியா, ஹொரவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள புடவைக் கடை ஒன்றில் நேற்று முன் தினம் மாலை இளைஞன் ஒருவர் கத்திக் குத்துக்கு இலாக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்குச் சென்ற இளம் குடும்ப பெண் ஒருவருக்கு, வவுனியா, ஹொரவப் பொத்தானை வீதியில் பள்ளிவாசலுக்கு அண்மையாக அமைந்துள்ள புடைவைக் கடை ஒன்றில் பணியாற்றும் இளைஞர் ஒருவர் கிண்டலடித்ததுடன், குறித்த பெண்ணுடன் பேச முனைந்துள்ளார்.

இதனை அடுத்து குறித்த சம்பவத்தை அந்த இளம் குடும்ப பெண் தனது கணவருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து அங்கு வந்த கணவர் தனது மனைவியையும் அழைத்துச் சென்று கிண்டலடித்த இளைஞர் வேலை செய்யும் புடைவைக் கடைக்குள் சென்று வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டதை அடுத்து, குறித்த இளம் குடும்ப பெண்ணின் கணவன் குறித்த இளைஞன் மீது கத்தியால் குத்தியுள்ளார்.

அதன்பின் அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்ற போது அவ்விடத்தில் நின்றவர்கள் அவரை விரட்டிப் பிடித்து, வவுனியா பொலிஸாரை வரவழைத்து அவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவத்தில் வவுனியா, முருகனூர் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)



# மீண்டும் அரசியலில் பேரியல் அஷ்ரப்?

கொழும்பு, ஒக். 09

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரான காலஞ்சென்ற அஷ்ரப்பின் மனைவியான பேரியல் அஷ்ரப் மீண்டும் அரசியலுக்கு நுழைய முன்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்று சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளிவந்த அந்த சிங்கள வார ஏட்டின் பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வாரம் பிரதமரான தினேஷ் குணவர்த்தனவை சந்தித்த முக்கிய முஸ்லிம் பெண்கள் குழுவொன்று, இந்நாட்டு முஸ்லிம் பெண்கள் நேரடியாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த முஸ்லிம் பெண்கள் குழுவிற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் தலைமை தாங்கினார்.

பாராளுமன்ற வரலாற்றில் பாராளுமன்ற உறுப்பினராக அமைச்சர் பதவியை வகித்த ஒரே முஸ்லிம் பெண்மணியும் திருமதி அஷ்ரப் ஆவார். அவர் தலைமையிலான முஸ்லிம் பெண்கள் அரசியலில் ஈடுபட 50 சதவீத உரிமை வழங்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக இருந்தது. தற்போது 25 சதவீத முஸ்லிம் பெண்கள் மட்டுமே அந்த சலுகையைப் பெற்றுள்ளனர்.

இந்நாட்டின் வரலாற்றில் பொதுமக்களின் வாக்கு மூலம் பாராளுமன்றத்துக்கு தெரிவான ஒரே முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் அஞ்சனா உம்மா ஆவார். இவர் ஜே.வி.வி. கட்சியில் இருந்து கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தற்போது இந்த நாட்டில் பாராளுமன்ற உறுப்பினராக அரசியல் பதவி வகித்த ஒரே முஸ்லிம் பெண் காத்தான்குடி உள்ளூராட்சிச் சபை உறுப்பினர் சல்மா ஆவார். இவர் முன்னாள் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் சகோதரி ஆவார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் இந்தியாவுடன் இலங்கை கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 09

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக முதன்மைச் செயலாளர் ராகேஷ் பாண்டே ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துதல், விவசாயத் துறை,வெளிநாட்டு கையிருப்பை பராமரிக்க ஏற்றுமதி உற்பத்தி நிறுவனங்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் மற்றும் சில இறக்குமதிகள் நிறுத்தப்பட்டதன் மூலம் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை நுகர்வோருக்கு குறைந்த விலையில் வழங்குவ



தற்கு அமைச்சு கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பல வர்த்தக உடன்படிக்கைகள் முடிவுக்கு வரவில்லை எனவும் இந்த முரண்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்ய அமைச்சரவை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# தமிழ் மக்களின் பிரச்னை குறித்து ஜனாதிபதியுடன் விரைவில் பேச்சு!

## அமைச்சர் அமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஒக். 09

“குருந்தூர்மலை பிரச்னை உள்ளிட்ட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.”

- இவ்வாறு கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் குருந்தூர்மலை ஆதி சிவன் கோயில் ஆக்கிரமிப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. முன்வைத்த கூற்றுக்கள் தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் கூறுகையில்,

“கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த குருந்தூர்மலை பிரச்சினையை நான் குறைத்து மதிப்பிடவில்லை.

குருந்தூர்மலை பிரச்னை உள்ளிட்ட தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விடயத்தில் நான் தனிப்பட்ட ரீதியிலும் கவனம் செலுத்துவேன்.

எந்தவிதத்திலும் எவரும் இனவாதமாகச் செயற்படுவதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது.

நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படுபவர். நாட்டின் அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அதுவே அவசியமாக உள்ளது - என்றார். (அ)

# தேரில் ஏறி அருள் பாலித்தார் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார்







வடமராட்சி, ஒக். 09

வரலாற்றுச் சிறப்பு மிக்க துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் திருவிழா நேற்று சனிக்கிழமை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம் பெற்றது.

நேற்று காலை 7.45 மணியளவில் வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்றதை தொடர்ந்து ஆஞ்சநேயர் முன்வர விநாயகப் பெருமான், மற்றும் வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமானும் கூட வர வல்லிபுர ஆழ்வார் தேரேறி வலம்வந்தார்.

பக்தர்கள் ஆயிரக்கணக்கான தேங்காய்களை உடைத்தும், அங்கப்பிரதட்சணம் செய்தும், தமது நேர்த்திக்கடன்களை தீர்த்தத்துடன் தூக்குக் காவடி, பால் காவடி நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றினர்.

இன்று ஞாயிறு வல்லிபுர பெருமானுக்கு பிற்பகல் சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெற உள்ளது. (அ-02)

## ஓமந்தை பிரதேசத்தில் அரியவகை அரணை!



வவுனியா, ஒக். 09

வவுனியா ஓமந்தை, அரச வீட்டுத் திட்ட பகுதியில் இலங்கைக்கே உரித்தான அரிய வகை அரணை இனம் ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை அரச வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு நேற்று சனிக்கிழமை சென்ற ஒருவர் "தாசியா ஹாலியானஸ்" என்ற இலங்கைக்கே உரித்தான அரியவகை அரணை இனம் ஒன்றை அவதானித்து புகைப்படம் எடுத்துள்ளார்.

இதேவேளை 1970 ஆம் ஆண்டுகளில் வெளி வந்த இலங்கையின் இரண்டு ரூபாய் நாணயத்தாளில் இதன் படம் அரசாங்கத்தால் பொறிக்கப்பட்டு இருந்ததுடன், முத்திரை ஒன்றிலும் இதன் படம் பொறிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதிக் காலப்பகுதியில் ஓமந்தைக் காட்டுப் பகுதியில் இதே போன்ற அரணை இனம் ஒன்று அவதானிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# புனர்வாழ்வுச் சட்டமூலத்தை மீள் பரிசீலனை செய்யுங்கள்

## கோருகின்றார் ரவூப் ஹக்கிம்

கொழும்பு, ஒக். 09

**புனர்வாழ்வுச் சட்டமூலத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.**



"ஜெனிவா மனித உரிமை பேரவையில் எமது நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இலங்கைக்கு ஏற்பட்டது அவமான தோல்வியாகும். இதற்கு முன்னர் எமக்கு எதிரான பிரேரணையில் 11 நாடுகள் எமக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன. எனினும் இம்முறை அது ஏழாக குறைவடைந்துள்ளது. அதேபோன்று வாக்களிப்பில் கடந்த முறை 24 நாடுகள் நடுநிலையாக இருந்த போதும் இம்முறை அது 20 நாடாக குறைவடைந்துள்ளது.

அதேபோன்று இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியத்தின் மூலம் எமக்கு சாதகமான பதில் கிடைக்கும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தது அவ்வாறான எந்த சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. சீனா எமக்கு ஆதரவளிக்கும் என்பது நாம் ஏற்கனவே அறிந்த விடயம்.

மேலும் ஜெனிவாவில் எமக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணையில் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டுகள் முதல் தடவையாக கொண்டுவரப்பட்டதாகும்.

எமது நடவடிக்கைகள் காரணமாகவே நாம் தேவையில்லாத பிரச்சினைகளுக்குள் சிக்கியுள்ளோம். புனர்வாழ்வு சட்ட மூலம் பயங்கரவாத தடைச்சட்டம், இனவாத செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகும். புனர்வாழ்வு சட்டமூலம் பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியன உயர் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் இந்த விடயங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன." - எனவும் ஹக்கீம் குறிப்பிட்டார்.(அ)

# மண்ணெண்ணெய் இல்லை கடல் தொழில் கடும் பாதிப்பு

## மீனவக் குடும்பங்கள் போராட்டம்



மட்டக்களப்பு, ஒக்.09

மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தினால் கடல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீனவக் குடும்பங்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து, 100 நாட்கள் செயல்முனைவின் 69ஆவது நாள் போராட்டம் நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளா பிரிவுக்கு உட்பட்ட மீனவர் ப்பகுதியில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள் ஒன்று கூடுவது எமது உரிமை , கருத்துச் சுதந்திரம் எமது உரிமை, வடக்கு-கிழக்கில் உள்ள மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைத் தாருங்கள் போன்ற கோசங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இப் போராட்டத்தில் செயற்பாட்டாளர்கள், இளைஞர் கழக மற்றும் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மகாவலி 'எல்' வலய திட்டத்துக்கு எதிராக தமிழ் தரப்புக்கள் ஒன்றிணையவேண்டும்!

## சுதந்திரக் கட்சி கோரிக்கை



வடமராட்சி, ஒக். 09

முல்லைத்தீவில் தமிழர் பகுதிகளை மகாவலி (எல் ) வலயம் என்ற போர்வையில் குடிப் பரம்பலை மாற்ற முயற்சிக்கும் செயற்பாட்டுக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் ஒரு அணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

மகாவலி வலயம் என்ற போர்வையில் தமிழர் பகுதிகளில் இனப் பரம்பலை மாற்றுவதற்கு ஏற்கனவே திரைமறைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது அதன் செயற்பாடுகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குகுழாய்,கொக்குத்தொடுவாய்,நாயாறு போன்ற பகுதிகளை மகாவலி அமைச்சின் கீழ் எல் வலயமாகப் பிரகடனப்படுத்தி குடியேற்றங்களை விரிவுபடுத்தும் திட்டங்கள் இடம் பெறவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் இன விகிதாசாரத்தில் மாற்றம் ஏற்பட உள்ள நிலையில் தமிழ் மக்களின் பாராளுமன்றம் பிரதேச சபை மற்றும் உள்ளூர் ஆட்சி மன்ற பிரதிநிதித்துவங்களில் தாக்கத்தை உண்டு பண்ணும்.

குறித்த திட்டம் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் துறை சார்ந்த அமைச்சருக்கு குறித்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்த உள்ளேன்.

ஆகவே குறித்த திட்டத்தின் பாதகத் தன்மைகளை உணர்ந்து தமிழ் கட்சிகள் ஓரணியில் குரல் கொடுப்பது காலத்தின் தேவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-02)

ஈழநாடு
Eelanadu
09.10.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# ஜெனிவாவில் இந்திய அணுகுமுறை?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில், இந்தியா வாக்கெடுப்பை தவிர்த்திருக்கின்றது. இந்தியாவின் அணுகுமுறை இவ்வாறுதான் அமையுமென்பது ஏற்கனவே எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகவே இருந்தது. கடந்த கூட்டத் தொடரின் போதும், இந்தியா வாக்களிப்பை தவிர்த்திருந்தது. இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது - அதற்கு சிறிலங்கா அரசாங்கம் பொறுப்பு கூறவேண்டும் என்னுமடிப்படையிலேயே சிறிலங்காவின் மீதான பிரேரணைகள் தொடர்கின்றன. 2012இல், அமெரிக்க அனுசரணையுடன் முதலாவது பிரேரணை கொண்டுவரப்பட்டது. இந்த பிரேரணையை அப்போதைய மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய அரசாங்கம் ஆதரித்திருந்தது.

அதே போன்று 2013இல் கொண்டுவரப்பட்ட பிரேரணையையும் இந்தியா ஆதரித்திருந்தது. 2014இல், இந்தியா வாக்களிப்பை தவிர்த்தது. 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றமானது நிலைமைகளை மாற்றியது. ரணில்-மைத்திரி அரசாங்கம், 2015இல் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இணையனுசரணை வழங்கியதை தொடர்ந்து, மனித உரிமைகள் தொடர்பான அழுத்தங்களில் திருப்புமுனை ஏற்பட்டது. ஏனெனில் பிரேரணையை அமுல்படுத்துவதற்கான வாக்குறுதியை அரசாங்கம் வழங்கியது. இதனைத் தொடர்ந்து, 2015, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் வாக்கெடுப்பின்றியே, நிறைவேற்றப்பட்டது.

2020இல் மீளவும் ராஜபக்ஷக்கள் அதிகாரத்தை கைப்பற்றியதை தொடர்ந்து, நிலைமைகள் மாற்றமடைந்தன. மீளவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் மோதும் அரசியல் சூழல் உருவாகியது. இந்த பின்புலத்தில் கடந்த இரண்டு பிரேரணைகளின் போதும் இந்தியா வாக்கெடுப்பை தவிர்த்திருந்தது. ஆனால் இந்தியா அதன் உறுதியான நிலைப்பாட்டை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. அதாவது, 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - அத்துடன் தமிழ் மக்களின் சமத்துவம் மற்றும் கௌரவம் உறுதிப்படுத்தப்படும் வகையில், அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தியாவின் ஜெனிவா அணுகுமுறையானது அதன் வெளிவிவகார அணுமுறை தொடர்பானது. சிறிலங்கா தொடர்பான பிரேரணையின் போது வாக்களிப்பை தவிர்த்துக் கொண்டது போல், சீனாவின் ஸின்ஜியாங் மானிலத்தில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான வரைவு - பிரேணைக்கு ஆதரவான வாக்கெடுப்பையும் இந்தியா தவிர்த்திருக்கின்றது. இந்தியாவின் அணுகுமுறைகளை காங்கிரஸ் இந்தியா மற்றும் பி.ஜே.பி இந்தியா என்னும் நோக்கிலும் அணுக வேண்டியிருக்கின்றது. பி.ஜே.பியின் காஷ்மீர் தொடர்பான அணுகுமுறையானது, சர்வதேசளவில் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகின்றது. இந்த விடயங்களையும் கருத்தில் கொண்டே இந்தியாவின் மனித உரிமைகள் தொடர்பான அணுகுமுறையை நாம் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அமெரிக்காவில் குடியரசு கட்சி ஆட்சிக்கு வரும் போது விடயங்கள் எவ்வாறு மாறுகின்றன - அதே விடயங்கள் பின்னர் ஜனநாயகக் கட்சியின் ஆட்சியில் எவ்வாறு மாறுகின்றன-என்பதை கருத்தில் கொண்டால், இந்த விடயத்தை இலகுவாக புரிந்துகொள்ள முடியும். ரொனால்ட் டிரம் தலைமையிலான குடியரசு கட்சி ஆட்சியை கைப்பற்றியதை தொடர்ந்து, ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா வெளியேறியது.

ஆனால் ஜோ பைடன் தலைமையில் ஜனநாயக கட்சி ஆட்சிக்கு வந்ததை தொடர்ந்து, மீளவும் பேரவையுடன் அமெரிக்கா இணைந்திருக்கின்றது. இந்த வேறுபாடுகள் அமெரிக்க கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை ஆனால் அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தும். அதே போன்றுதான் தமிழ் மக்கள் தொடர்பான இந்திய அணுகுமுறையில் மாற்றமில்லை, ஆனால், ஐ.நாவில் அதன் அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்படும். எனவே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்வதோ அல்லது அதை நிராகரிப்பதோ அடிப்படையான கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை. இந்த விடயங்களை தமிழ்த் தேசிய தரப்புக்கள் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

# ஒரு சிலர் விருப்பங்களுக்காகவே இந்த நாட்டில் திருத்தச் சட்டங்கள்

## கோவிந்தன் கருணாகரம் சுட்டிக்காட்டு



*கொழும்பு, ஒக். 09*

*பாராளுமன்றத்தில் வருகின்ற திருத்தச் சட்டங்களெல்லாம் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அல்லாமல் ஒரு சிலரது, ஒரு சில கட்சிகளது விரும்பங்களை நிறைவேற்றுவதற்காகவே கொண்டு வரப்படுகின்றன. அந்த அடிப்படையிலேயே 22ஆவது திருத்தச் சட்டத்தின் விவாதமுமும் பிற்போடப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் உரை மீதான விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*22ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக விவாதிக்கவேண்டிய இந்த நேரத்தில் ஜனாதிபதியின் உரை சம்பந்தமான ஒத்திவைப்புப் பிரேரணையில் பேசுகின்றோம். 22ஆவது திருத்தச் சட்டம் ஒரு சிலரின் விருப்பதைப் பூர்த்தி செய்யாதமையினாலே அது இன்று சபைக்குக் கொண்டுவரப்படவில்லை எனக் கருதுகின்றேன்.*

*இதேபோல் தான் மாறி மாறி இந்த நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் தங்களது தேவைக்காக அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றார்கள். இந்த அரசியலமைப்பில் 44 வருட காலத்திலே 2ஆவது திருத்தச் சட்டம் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராஜதுரையை அரச தரப்புக்கு எடுப்பதற்காக அவரது உறுப்புரிமையைப் பறிப்பதைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமாக இருக்கின்றது. 3ஆவது திருத்தம் ஒரு ஜனாதிபதி ஆறு வருடங்கள் ஆட்சியில் இருக்கலாம் என்பதை மாற்றி அவரது ஆட்சிக் காலத்திலே நான்கு வருடத்தினுள் தேர்தலை நடத்தலாம் என்று கொண்டு வரப்பட்டது. 6ஆவது திருத்தச் சட்டம் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்ணியின் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தவர்களை இந்தச் சபையில் இருந்து துரத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டது. 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமாகப் பிறப்பிக்கப்பட்ட குழந்தை, 18ஆவது திருத்தச் சட்டம் மஹிந்தவின் அதிகாரத்தைப் பலப்படுத்தக் கொண்டு வரப்பட்டது. 19 ஆவது திருத்தச் சட்டம் ராஜபக்ஷ குடும்பத்தை மையப்படுத்தி அவர்களை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டது. 20ஆவது திருத்தச் சட்ட மீண்டும் கோட்டபாய ராஜபக்ஷவின் அதிகார வெறிக்கு உரமூட்டிய சட்டம்.*

*ஆக மொதத்தில் இங்கு வருகின்ற திருத்தச் சட்டங்களெல்லாம் ஒரு சிலரது, ஒரு சில கட்சிகளது விரும்பங்களை நிறைவேற்றுவதற்காகத் தான் கொண்டு வரப்படுகின்றன. அதேபோல் தான் 22ஆவது திருத்தச் சட்டமும் இந்தச் சபையிலே விவாதிக்கப்படவேண்டிய நிலையில் ஒரு சிலருக்காக இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்படாமல் இருக்கின்றது.*


*இந்தத் திருத்தச் சட்டங்களில் 13ஆவது திருத்தச் சட்டம் ஒன்றுதான் இலங்கையில் மக்களின் பிரச்னைகளை ஓரளவேனும் தீர்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமாகும். நாங்கள் அதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவ்வாறு இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஆரம்பப் புள்ளியாகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தைக்கூட இந்த நாட்டின் அரசுகள் அரசிலமைப்பினை மீறிக் கையாளுகின்றன. 13ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்கள்கூட இன்றுவரை முழுமையாக வழங்கப்படாமல் மாறி மாறி ஆண்டுகொண்டிருக்கும் ஆட்சியாளர்களால் அரசியலமைப்பு இன்றுவரை மீறப்படுகின்றது.*

*இன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வீரவசனங்கள் பேசிக் கொண்டிருக்கின்றார். இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையில் இலங்கைக்கு ஏழு நாடுகளே ஆதரவு தெரிவித்திருக்கின்றன. அவை எந்த நாடுகள் சீனா, பாகிஸ்தான் போன்றவை. இந்த நாடுகளில் ஜனநாயகம் இருக்கின்றதா என்பதைப் பாருங்கள். இலங்கைக்கு எதிராகவுள்ள நாடுகளைப் பாருங்கள். அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஜனநாயகம் நிரம்பிய நாடுகள். அந்த நாடுகளிலே பல்மொழி பேசுகின்ற பல இன மக்கள் வாழுகின்றார்கள். அந்த மக்களுக்கான அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த நாடுகள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.*

*அதேபோன்று இந்த நாடும் முன்னேற வேண்டுமானால் உங்களிடையே நல்லெண்ணம் உருவாக வேண்டும். பிரேரணைக்கு நடுநிலை வகித்த இந்தியாவைப் பின்பற்றிய நாடுகள் என்ன சொல்லுகின்றன. 13ஆவது திருத்தச் சட்டத்தை முழு அதிகாரத்துடன் நிறைவேற்றுங்கள், மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள் என்றே கூறிக் கொண்டிருக்கின்றார்கள் - என்றார்.*

*(அ-06)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# நோபல் பரிசு பற்றியது

கணபதி சர்வானந்தா

பகிர்வு -50

"நாங்கள் வார்த்தைகளால் உருவாக்கப்பட்டவர்கள். அன்னி எனார்க்ஸ் அவர்களின் அந்தரங்கங்களைக் குறித்த தீவிரமான எழுத்துகள் அதனை உருதிப்படுத்துகிறது. எந்தவித வெட்கமுமில்லாது அவர் தனது அந்தரங்க வாழ்க்கையை முன்வைத்து எழுதுகிறார். அதுவே அவரது பலம். சமூகத் தில் மறைந்திருக்கின்ற பலரது குரல்களின் வெளிப்பாடாகவே அதனைப் பார்க்கலாம். அது பலரை வலுப்படுத்துவதாகவும் கொள்ளலாம்." – என உலகப் பிரசித்திபெற்ற "தி கார்டியன்" என்ற பத்திரிகை அன்னி எனார்க்ஸ் பற்றிய தனது கருத்தை வெளி யிட்டிருக்கிறது.

"எழுத்துகளால் உலகை விடுதலைபெறச் செய்யலாம் என அன்னி எனார்க்ஸ் நம்புகிறார் " – டெய்லி நியூஸ் குறிப்பிடுகிறது.

"பொதுவாக ஆண் எழுத்தாளர் ஒருவர் எழுதும்போது "எனது மனைவிக்குக் குழந்தை பிறந்தது. அது ஆண் குழந்தை. நான் மகிழ்ச்சியாக அதனை உணர்கிறேன்." என்று மட்டும் எழுதிவிட்டுப் போய்விடுவார். அவர் மட்டுமல்ல எல்லா ஆண் எழுத்தாளர்களும் அவ்வாறே எழுதுகிறார்கள். ஆனால் பிரசவிக்கும் பெண்ணின் குருதிப்போக்கினையோ, வலியில் அவள் கண்ணீர் மல்கப் போராடுவதையோ, கத்தியால் உடலைக் கிழித்துக் குழந்தையை வெளியே எடுப்பதையோ, தொடைகள் நடுங்க அந்தப் பெண் வேதனையில் துடிப்பதையோ ஒரு வரி கூட அவர்கள் எழுதுவதில்லை. பிரசவம் என்பது அவர்களுக்கு மகிழ்ச்சியான விஷயம். ஆனால் பெண்களுக்கு அது பெரும் வேதனை. தாங்க முடியாத உடல்வலி. ஆண்களில் பலருக்குப் பிரசவக் காட்சியை நேரில் கண்ட அனுபவமில்லை. அந்தக் குருதியோட்டத்தின் பிசுபிசுப்பைத் தொட்டு உணர்ந்ததில்லை. பின்பு எப்படி அவர்களால் அதை எழுத முடியும். ஒரு பெண்ணாக நான் அதையே எழுதுகிறேன்." – இந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெறும் பிரெஞ்சு எழுத்தாளர் அன்னி எனார்க்ஸ் எழுதிய கட்டுரையில் இருந்து சில வரிகள் இவை. அவருக்குத் தற்போது வயது 82. எளிமையான எழுத்துகள் மூலம் சமத்துவத்தை வலியுறுத்தும் அவருக்கு நோபல் பரிசை நடுவர் குழு அறிவித்திருக்கிறது. அவர் 20க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். நவீன பிரான்ஸ் நாட்டின் சமூக வாழ்க்கையின் உள்ளார்ந்த விஷயங்களை இவர் மிகவும் நுட்பமாகத் தனது எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளுக்கு மேலாக அன்னி எனார்க்ஸின் பல புத்தகங்கள், பிரான்ஸ் நாட்டில் உள்ள பள்ளிகளில் பாடப் புத்தகங்களாக இருக்கின்றன. உணர்வுகள் மற்றும் நினைவில் உள்ள விஷயங்களை, அதனூடாகப் பெற்ற அனுபவங்களைத் தைரியத்துடனும் அர்ப்பணிப்புடனும் வெளிப்படுத்தியற்காகவே அவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாக நடுவர்கள் குழு தெரிவித்திருக்கிறது. நோபல் பரிசுடன், மேலதிகமாக 9,11,400 அமெரிக்க டொலர்களும் பரிசுத்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அப் பரிசுகளை டிசம்பர் 10-ம் தேதி ஸ்டாக் ஹோம் நகரில் நடைபெறவிருக்கும் விருது விழாவில் அவர் பெற்றுக் கொள்வார்.

இலக்கியத்துக்கான நோபல் பரிசு முதலில் 1901-ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதுவரை 119 பேர் அப் பரிசைப் பெற்றுள்ளனர். அந்த வரிசையில் பரிசு பெறும் 17-வது பெண் எழுத்தாளராக அவர் விளங்குகிறார். "பாலினப் பாகுபாட்டிற்கு எதிரான மாறுபட்ட கருத்துகளைத் தனது எழுத்தின் மூலம் தைரியமாக வெளிப்படுத்தி வருவதோடு மொழி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இலக்கியத்துக்குத் தொண்டாற்றியும் வருகிறார். அவருக்கு இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்கப்படுவது மகிழ்சிக்குரியது." – என பிரெஞ்சு தேசத்துப் பத்திரிகைகள் அவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளன.

அன்னி எனார்க்ஸ் பிரான்சின் நார்மேண்டிப் பகுதியில் உள்ள லில்லிபோன் நகரத்தில் 1940-ம் ஆண்டு பிறந்தார். பின்னர் அவரது பெற்றோர் வையொட் நகருக்குக் குடி பெயர்ந்தனர். அங்கு அவரது பெற்றோர் மளிகைக் கடை வைத்து நடத்தினர். ஒரு கத்தோலிக்கப் பள்ளியில் பயின்ற அவர், தனது 18 வயதில் அதாவது 1958-ம் ஆண்டு முதன்முறையாக வீட்டை விட்டு வெளியேறி, கோடைகால முகாமில் குழந்தைகளைப் பராமரிக்கும் பணியில் சேர்ந்து கொண்டார். ரூவன் பல்கலைக்கழகத்தில் பயின்ற அவர், 1977 முதல் 2000 வரை பேராசிரியராகப் பணியாற்றினார்.

எனார்க்ஸ் தனது முதல் நாவலை 1974-ல் எழுதி வெளியிட்டார். அந்தப் புத்தகம் கருக்கலைப்பைப் பற்றியதாகும். 1984 இல் விவாகரத்தைப் பெற்றுக்கொண்டார். அவரது 4-வது புத்தகமான "ல பிளேஸ்" அவருக்கு நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்தது. அந்தப் புத்தகத்தில் அவரது தந்தையின் உணர்ச்சியற்ற நிலை குறித்தும், அவரை அந்நிலைக்குத் தள்ளிய சமூகச் சூழல் குறித்தும் அவர் எழுதியிருந்தார். திருமணமான வெளிநாட்டு நபர் ஒருவருடன் தனக்கு இருந்த உறவு குறித்து அவர் எழுதிய "ஏ சிம்பிள் பஷன்" என்ற புத்தகம் பிரான்சில் அதிகமாக விற்பனையான புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 2000-ம் ஆண்டு அவர் எழுதிய நாவலான ஹேப்பனிங், சட்டவிரோத கருக்கலைப்பின் விளைவுகளைத் துலக்கமாக வெளிப்படுத்தியிருந்தது. பல புத்தகங்களை எழுதியிருந்தாலும், 2008 இல் அவர் எழுதிய லெஸ் அன்னீஸ் என்ற புத்தகம் 2017-ம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்ட பிறகுதான் அவர் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றார். 2014 ஆம் ஆண்டில், செர்ஜி-போன்டோயிஸ் பல்கலைக்கழகத்தால் அவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. "கான்ஸ்" திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட அவரது குடும்ப வாழ்க்கையின்போது எடுக்கப்பட்ட வீடியோக்களின் அடிப்படையில் உருவான "தி சுப்பர் 8 இயர்ஸ்" என்ற ஆவணப்படம் குறித்து விவரித்த அன்னி எனார்க்ஸ், "அந்த 10 வருடங்களே என் வாழ்வின் முக்கியமான வருடங்கள் எனவும், அவைதான் எழுதுவதற்கான எனது விருப்பத்தை அதிகப்படுத்தியது." எனவும் அவர் கூறியிருக்கிறார். காதல் திருமணம் செய்திருந்தாலும், தான் சுதந்திரம் இல்லாமல் தவித்ததாகவும், "இது எனது வாழ்க்கைக் கதை மட்டுமல்ல, விடுதலையைத் தேடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பெண்களின் கதை." எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# இந்தவார ராசிபலன் 09.10.2022 - 15.10.2022

ஒக்ரோபர் 09 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - புரட்டாசி 21

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : பௌர்ணமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

பணம் பலவழிகளிலும் வரும். எதிர்பார்ப்பு நிறைவேறும். அதற்குமேல் திடீர் செலவு ஏற்படும். முயற்சிகளில் முன்னேற்றம் தோன்றும். நெருக்கடி விலகும். விருப்பம் நிறைவேறும். வருமானம் கூடும். செயல்பாடுகளில் எதிர்பார்த்த நிலை இல்லாமல் போகும். தொழிலில் லாபம், பணியில் நன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

முயற்சிகள் வெற்றியாகும். லாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த ஆதாயம் வரும். திடீர் செலவும், வருமானத்தில் தடையும் ஏற்படும். அவசர செயல்கள் சங்கடத்தில் முடியும்.விருப்பம் நிறைவேறும், தொழில், உத்தியோகம் சிறப்பை தரும், குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு உண்டாகும். மனம் மகிழும்படியான நிலை உண்டாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

நெருக்கடி விலகும். எண்ணம் நிறைவேறும். முயற்சி வெற்றியாகும். வருமானம் அதிகரிக்கும். வியாபாரத்தில் இருந்த தடை விலகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.விருப்பம் நிறைவேறும், வியாபாரத்தில் லாபம் ஏற்படும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். புதிய முயற்சி பலன் தரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பு உண்டாகும். புதிய முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள். திட்டமிட்ட செயல் நடந்தேறும், குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். சேமிப்பு உயரும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

செயலில் நெருக்கடி இருக்கும். அதன்பின் எதிர்பார்ப்பு நிறைவேறத் தொடங்கும். வருமானம் அதிகரிக்கும். செயல்கள் வெற்றியாகும். பொன் பொருள் சேரும். குடும்பத்தில் இருந்த சங்கடம் விலகும். மனம் மகிழும்படியான சம்பவம் நடக்கும். எதிர்பார்த்த ஆதாயம் காண்பீர்கள். ஆதாயநிலை உண்டாகும். செல்வாக்கு அதிகரிக்கும். புதிய பாதை தெரியும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

விருப்பம் நிறைவேறும். முயற்சி இழுபறியாகும். செயல்களில் சங்கடம் தோன்றும். எதிர்பார்த்த வருமானம் வரும், தொழில், பணியில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும்.எதிர்பார்ப்பு இழுபறியாகும். மனஅழுத்தம் உண்டாகும். செல்வாக்கு உயரும். வருமானம் அதிகரிக்கும். முயற்சி ஒவ்வொன்றாக நிறைவேறும். துணிச்சலுடன் செயல்பட்டு வாழ்வுக்கு வேண்டியதை அடைவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

செயல்கள் வெற்றியாகும். தடைபட்ட வருவாய் வரத் தொடங்கும். புதிய முயற்சிகள் வேண்டாம். பேச்சில் நிதானத்தைக் கடைபிடியுங்கள். விருப்பம் நிறைவேறும். செயல்கள் லாபமாகும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். எதிர்பாராத நெருக்கடி தோன்றும். தடைகள் விலகும். நீண்டநாள் திட்டங்கள் நிறைவேறும். எதிர்ப்புகளை சரிசெய்து வருமானத்திற்கு வழிகாண்பீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தேவை நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். தடைபட்ட வேலைகள் நடைபெறத் தொடங்கும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். செயலில் கவனம் தேவை. முயற்சி பலிதமாகும். விருப்பம் நிறைவேறும். உழைப்பிற்கேற்ற வெற்றியை அடைவீர்கள்.செல்வாக்கு உயரும். எதிர்பார்ப்பு நிறைவேறும். பிரச்னைகளை எதிர்கொள்வீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருப்பம் நிறைவேறும். நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். அரசு வழியிலான முயற்சி அனுகூலமாகும்.செயல்கள் வெற்றியாகும். குடும்பத்தின் முன்னேற்றத்திற்குரிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். திட்டமிட்டு செயல்படுவீர்கள். தடைகளை சரி செய்வீர்கள். விருப்பம் நிறைவேறும். வருமானம் கூடும். உங்களுடைய நீண்டநாள் எண்ணம் நிறைவேறும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். முயற்சிகள் எளிதாக நிறைவேறும். எதிர்ப்பு விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொன் பொருள் சேரும். பணவரவு மகிழ்ச்சி தரும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும் வாரம். சுறுசுறுப்பாக செயல்பட்டு உங்கள் வேலைகளை முடிப்பீர்கள். வருமானத்திற்குரிய வழிகள் உண்டாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

முயற்சிக்கேற்ப நன்மை அடைவீர்கள். பூர்வீக சொத்துகளில் பிரச்னை உண்டாகும். குடும்பத்திற்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளி உண்டாகும். எதிர்பார்த்த பணம் வரும். பிள்ளைகளின் வழியே நன்மை அதிகரிக்கும். இழுபறியாக இருந்த பிரச்னைகள் முடிவிற்கு வரும். தொழிலில் கூடுதல் கவனம் தேவை. உடல் நிலையில் கூடுதல் கவனம் தேவை.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


எதிர்பார்ப்பு நிறைவேறும் வாரம் இது. எண்ணம் நிறைவேறும். புதிய முயற்சிகள் வெற்றியாகும். பொருளாதார நிலை உயரும். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். நன்மை அதிகரிக்கும் வாரம் இது. குடும்பத்தினர் உதவியுடன் நினைத்ததை அடைவீர்கள்.உழைப்பிற்கேற்ற லாபம் காண்பீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். எதிர்ப்பு விலகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

செலவு அதிகரிக்கும். அதன்பின் நிலைமை சீராகும். பொன் பொருள் சேரும். துணிச்சலுடன் செயல்பட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். முயற்சிக்கேற்ப பலன் உண்டாகும். திடீர் செலவால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். சகோதரர் வழியில் உதவி கிடைக்கும். உடலில் சில சங்கடம் தோன்றும் என்றாலும் மனவலிமையால் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்தில் குழப்பம் உண்டாகும். அந்நியரால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள்.

# சோழர்கள் இந்துக்களா? ராஜராஜ சோழன் இந்துவா?

## வெற்றிமாறன் தொடக்கியுள்ள விவாதம்!



சென்னை மடல்
-பகவான் சிங்-

பசிக்கு வயிற்றில் இடமில்லை, மனதில் கவலைகளின் சுமை இல்லை, என் உலகில் நல்லறிவிற்கு வேலையில்லை, பின், நான் என்ன தான் செய்வதப்பா? அந்தக் காலத்துக் கதையைச் சினிமாவில் கண்டு, அதில் வரும் மன்னரின் சபையில் நடக்கும் பண்டிதர்களின் விவாதங்களைப் போல் இப்போது நானும் பெரும் பேரறிஞனைப்போல் நடிக்க ஆசைப் பட்டு, ஒரு சுவாரஸ்யமான விவாதத் தைத் தொடங்கினால் என்ன? செய்துதான் பார்ப்போமே! சோழர் கள் இந்துக்களா, ராஜராஜ சோழன் இந்துவா? தலைப்பு சரியா? இதே விவாதத்தைச் சமீபத்தில் பலர் பல இடங்களில் எழுப்பியதை நீங்கள் படித்திருக்கலாம், இணையத்தில் கண்டு பிரமித்திருக்கலாம்.



ராஜராஜ சோழன்

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமா வளவனின் 60 ஆண்டு பிறந்த நாள் மணி விழா நிகழ்ச்சி மேடையில், ஒக்ரோபர் முதல் தேதி, சனிக்கிழமை யன்று இந்த விவாதம் தொடங்கிவைக்கப்பட்டது. தொடங்கி வைத்தவர், 'அசுரன்', 'ஆடுகளம்', 'விசாரணை', 'வாடிவாசல்' போன்ற படங்களை இயக்கிய, விருது வென்ற திரைப்பட இயக்குநர் வெற்றி மாறன். தமிழர்களின் அடையாளங்களைத் திரித்து, மறைப்பதாக இவர் கவலை தெரிவித்தார். ராஜராஜ சோழனை 'இந்து அரசனா'கவும், தெய்வத் தமிழ்ப் புலவர் திருவள்ளுவருக்குக் காவிச் சாயம் பூசுவதாகவும் இவர் முழங்கினார்.

அந்த நிகழ்ச்சியில் திருமாவளவனைப் பாராட்டி, முதல்வர் ஸ்டாலின், கவிஞர் வைரமுத்து போன்ற பல பிரமுகர்கள் ஆற்றிய உரையில், இவரது பேச்சு கரைந்து போயிருக்கலாம். ஆனால், இயக்குநர் மணிரத்னத்தின் பிரம்மாண்ட படைப்பான 'பொன்னி யின் செல்வன்' திரைப்படம் திரைக்கு வந்த அடுத்த நாளே இவர் பேசிய இந்தப் பேச்சுக்கு சமூக ஊடகங்க ளிலும், பல்வேறு சமூக அரசியல் குழுக்களிடையிலும், வரலாற்றாசிரியர்கள் மற்றும் இலக்கிய வாதிககளிடமிருந்தும் எதிர்வினை கிளம்பியது. நடிகர் கமலஹாசன், திருமாவளவன், நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் போன்ற பலர் வெற்றி மாறனின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்தும், மற்றும் சிலர், வரலாற் றைத் திரிப்பதாக இவர் மீது குற்றம் சாட்டியும் கருத்துகள் வெளியிட்டனர்.



வெற்றிமாறன்



கமல்ஹாசன்

"கலையைச் சரியான முறையில் கையாளவேண்டியது அவசியம். இல்லையென்றால், நாம் நமது அடையாளங்களை விரைவில் இழந்து விடுவோம். நமது அடையாளங்கள் தொடர்ந்து திரிக்கப்படுகின்றன" என்று கூறிய வெற்றி மாறன், சோழர்கள், சைவர்களாக இருந்தார்கள் என் றும் அந்தக் கால கட்டத்தில் இந்து என்ற மதமே இல்லை என்றும் வலியுறுத்தினார். 'பொன்னியின் செல்வன்' படக்குழுவினரைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி யொன்றில் கலந்து கொண்ட நடிகர் கமலஹாசனின் கருத்துகளை ஊடகங்கள் அறிய விரும்பின. அவரது சகோதரர் மகள் சுஹாசினி, மணிரத்தினத்தை மணந்து கொண்டவர் என்றாலும், கமலஹாசன் தனது கருத்தை வெளிப்படையாகக் கூறத் தயங்கவில்லை. "ராஜராஜ சோழன் காலத்தில் இந்து என்ற மதமே இல்லை. வைணவம், சைவம், சமணம் போன்ற மதங்கள்தாம் இருந்தன. இந்த அனைத்துப் பெயர்களையும் நினை வில் வைத்திருக்க சிரமப்பட்ட ஆங்கிலேயர்கள் அனைத்தையும் 'இந்து' என்ற ஒற்றை அடையா ளத்திற்குள் அடக்கினர். தூத்துக்குடியை, ட்யூடி கொரின் என்று மாற்றியதைப் போலத் தான் இது" என்றார்.

சீமானும் தனது வழக்கமான கர்ஜிக்கும் குரலில், "என் முப்பாட்டன் ராஜராஜ சோழனை இந்து என்று கூறுவது அராஜகம். இது, திருவள்ளுவருக்குக் காவிச் சாயம் பூசுவது போலத்தான். இந்து மதமும் இந்தியா வும் ராஜராஜ சோழன் காலத்தில் இருக்கவேயில்லை. தமிழ்ச் சக்கரவர்த்தி சைவத்தைப் பின்பற்றி சிவபெருமானை வணங்கினான் என்பதை உலகமே அறியும்" என்று முழங்கினார்.

நான் இந்தத் திரைப்படத்தைப் பார்த்தேன். அதில் இந்து என்று எங்குமே குறிப்பிடப்படவில்லை. என் நண்பர்கள் பலரையும்கூடக் கேட்டுப் பார்த்தேன். பொன்னியின் செல்வன் படத்தில் அப்படி இந்து மதம் குறித்த எந்தக் குறிப்பும் இருப்பதாக நினை வில்லை என்றே அவர்களும் உறுதி செய்தார்கள். பின், சோழப் பேரரசர் சைவர்தான் என்றும், இந்து இல்லை என்றும் இத்தனை விவாதங்கள் எழுவதன் காரணம் என்ன?

பொன்னியின் செல்வன் திரைப்படம் குறித்த இத்தகைய விவாதங்கள் எழுவ தற்குக் காரணம், இதன் இயக்குநர் மணிரத்தினம் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்பதுதான் என்றும், இது வெற்றிமாறன் இயக்கத்தில் வந்திருந்தால், இந்த சர்ச்சைகள் கிளம்பியிராது என்றும் என் நண்பர் ஒருவர் சுட்டிக்காட்டினார். என் மற்றொரு பிராமண வெறுப்பாளர் நண்பர் ஒருவர், ஆதித்த கரிகாலன் என்ற இளவரசனின் பெயரை சமஸ்கிருதப்படுத்தி, 'ஆதித்ய' கரிகாலனாகப் படத்தில் சித்தரித்திருப்பதாகவும் அதைக் கூர்ந்து கவனிக்கும்படியும் எனக்குக் கூறினார். நானும் கூர்ந்து கவனித்தேன். படத்தில், ஆதித்தன் ஆதித்ததானகவே இருந்தார். சமஸ்கிருதத்துக்கு மாற்றப்படவில்லை.

பழந்தமிழ் அரசர்களை இந்து அரசர்கள் என்று கூறுவது சரியா என்ற விவாதம் தமிழகத்தில் புதிதாக எழுந்ததில்லை. பிரபல தமிழ் எழுத்தாளரும் நாடக ஆசிரியருமான இந்திரா பார்த்தசாரதி, ராஜராஜ சோழன் சைவ அரசர்தான் என்றும், இந்து இல்லை என்றும் எழுந்துள்ள இந்த அண்மைக்காலச் சர்ச்சை, "ஊதிப்பெரிதாக்கப்பட்டது" என்று கூறியுள்ளார். "இந்த சர்ச்சை, பொன்னியின் செல்வன் படம் வெளியான பிறகு எழுந்துள்ளது. ராஜராஜ சோழன் வடநாட்டிலிருந்து பிராமணர்களை வருவித்து, அவர்கள் வசிக்க, அகரம் (பிராமண அர்ச்சகர்கள் வசிக்கக் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளை அக்ரஹாரம் என்ற பெயரில்) அமைப்பை உருவாக்கிய தற்குக் கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன" என்று இந்திரா பார்த்தசாரதி கூறுகிறார். அறிஞர்களும் வரலாற்றாய்வாளர்களும் தங்கள் ஆய்வு மற்றும் அறிவில் தோன்றிய கருத்துகளுடன் இந்தச் சர்ச்சையில் குதித்துள்ளனர். தஞ்சையில் உலகப்புகழ் பெற்ற ப்ருஹதீஸ்வரர் கோயிலைக் கட்டிய ராஜராஜ சோழன் உட்பட, பழந்தமிழ் அரசர்கள் காலத்தில் சிவனை வழிபடும் சைவமும் விஷ்ணுவை வழிபடும் வைணவமும் மட்டுமே இரு சமயங்களாக இருந்தன என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்தக் காலத்தில் கட்டப்பட்ட அனேக சிவாலயங்கள் உட்பட பல ஆலயங்களிலும் இந்து அல்லது இந்துசமயம் என்ற எந்தக் குறிப்பும் இல்லை. பழந்தமிழ் இலக்கியங்க ளான திருக்குறள் மற்றும் சிலப்பதிகாரத்திலும் பக்தி இலக்கியங்களிலும்கூட இந்து, இந்து சமயம் என்ற சொற்கள் பயன்படுத்தப்படவில்லை. சைவம் என்ற சொல்தான் தேவாரம் மற்றும் திருமுறைப் பாடல்க ளில் வழங்கப்படுகிறது. இந்து என்பது எங்கும் இல்லை என்று மிகத் தெளிவாக ஆதாரங்களுடன் வாதிக்கிறார்கள் பல அறிஞர்கள். அந்தக் கால கட்டத்தில்,பௌத்தமும் சமணமும்கூட இருந்தன என்றும் ஆனால், அவை பலவீனமடைந்து வந்தன என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்தியாவில் உள்ள முஸ்லிம் அல்லாத, கிறிஸ்தவர் அல்லாத அனைவரையுமே அரவணைத்து, ஆங்கிலே யர்களால் உருவாக்கப்பட்ட அடையாள அட்டை தான் 'இந்து' என்பதை நாம் அனைவரும் அறிவோம். சிவ, விஷ்ணு வழிபாட்டாளர்களுக்கிடையில் இருந்த போட்டியை இந்த ஒற்றை அடையாளம் கணிசமாகக் குறைத்துள்ளது என்பதும் உண்மை தானே? அந்தக் காலத் தமிழ்ச் சமுதாயத்தில், சக்தி, விநாயகர், முருகன் வழிபாடும் இருந்து வந்ததாக நான் படித்திருக்கிறேன். பழைய சமூகப் பிரிவுகளைப் பிடித்துத் தொங்காமல், ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்திய 'இந்து சமயம்' என்ற இந்த ஒற்றைக் குடையின்கீழ் இணைவதில் என்ன தவறு? ஆனால், இந்தப் பிரிவுகளைப் பாது காப்பதால்தான் தங்களது பாரம்பரிய, கலாசார அடையாளங்கள் பாதுக்காக்கப்படும் என்பது இதன் ஆதரவாளர்களின் வாதமாக இருக்கிறது. தமிழ்ச் சமூகத்தில் இந்தப் பிரிவுகளைத் தூக்கிப்பிடிக்கும் இந்த வாதத்தைவிட அபாயகரமான ஒரு குறுகிய பார்வை இருக்க முடியுமா? இந்து அடையாள

**'இந்து சமயம்' என்ற குடையின்கீழ் இணைவதில் தவறு என்ன?**

அட்டையால், சைவத்துக்கும் வைணவத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்படுகிறதா? மாறாக, பல பிரிவுகளை ஒன்றிணைத்துச் சகோதரத்துவத்தை வலுப்படுத்துகிறதா? இதை இன்னும் விரிவு படுத்தி, 'தேசியவாதம்' என்ற ஒற்றைக் குடையின் கீழ்,

இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள் மற்றும் பிற சிறிய குழுவினரையும் ஒன்றிணைக்க வேண்டாமா? என்னை ஒரு சைவன் என்றோ, வைணவன் என்றோ ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடையாளப்படுத்திக்கொள்ளாமல், 'இந்தியன்' என்ற அடையாளத்துக்கு மாறுவதில் வலிமையும் பெருமையும் கொள்ளவேண்டாமா?

'தேசியவாதம்' என்ற அடையாளம் அரசியல் சார்ந்தது என்றோ, அது சமய, கலாசார அடையா ளத்தைக் குறிப்பிடவில்லை என்றோ நினைக்கிறீர் களா? அப்படி நினைத்தால், அது முற்றிலும் தவறான கருத்து. இப்போது மதங்கள் பின்பற்றப்பட்டு வரும் சூழலில் மதத்தைவிட அதிகமாக, நாம் கண்ணால் கண்டு, கையால் உணரக்கூடிய நமது தேசம், நமது ஆன்மாவோடு இன்னும் நெருக்கமாக இருக்க முடி யும். மேலும், இந்து என்பது ஒரு மதம் அன்று, அது, சரியான வாழ்க்கை முறையைக் குறிக்கும் ஒரு வாழ்வி யல் நெறி என்று பல அறிஞர்கள் கூறிவந்துள்ளனர்.

அதனால், மற்ற சமயங்கள் சரியான வாழ்க்கை முறையைக் கூறவில்லை என்று பொருளில்லை. உலகளாவிய சகோதரத்துவத்தைப் போதித்து, வேறுபாட்டையும் வெறுப்பையும் விலக்கும் அனைத்து சமயங்களும் சரியான வாழ்க்கை முறையே.

இந்த என் பணிவான கருத்தை பா ஜ க தலை வர்களிடமும் வைக்க ஆசைப்படுகிறேன். கடந்த புதனன்று டெல்லியில் ஆம் ஆத்மீ கட்சி அமைச்சர் ஒருவர் தன்விழாவில் தலித்துகளை பௌத்த மதத் திற்கு மாற்றினார். கொந்தளித்து எழுந்தது பா ஜ க. டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலிடம் நீரும் உமது கட்சியும் இந்துக்களுக்கும், இந்து மதத்துக்கும் எதிரிகளா கூறுங்கள்? என்று சவால் விட்டார்கள் ப ஜ க தலைவர்கள். நல்லவேளை, விஷ்வஹிந்து பரிஷத் (வி. எச். பி) மூத்த தலைவர்களில் ஒருவரான சுரேந்திர ஜெயின் இந்த தலித்-பௌத்த சர்ச்சைக்கு முற்றுப் புள்ளிவைக்க முயன்றார். "பௌத்தத்திற்கு போவது மதமாற்றமல்ல. இந்திய அரசு அமைப்பு சட்டமும் பௌத்தர்களை இந்துக்களாகத்தான் பார்க்கிறது. பாபாசாஹேப் அம்பேத்கருக்கும் இதுபோன்றுதான்

(18ஆம் பக்கம் பார்க்க)

# 22 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் படும்பாடு!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

அரசியலமைப்புக்கான 22 வது திருத்தச்சட்டமூலம் கடந்தவாரம் இரு தினங்கள் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படவிருந்தது. ஆனால், அது சாத்தியமாகவில்லை. இப்போது அக்டோபர் 20, 21 திகதிகளில் அந்த விவாதத்தை நடத்துவதற்கு பாராளுமன்ற கட்சிகளின் தலைவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தீர்மானித்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றத்தின் அதிகாரங்களை வலுப்படுத்தும் நோக்கிலான இந்த திருத்தச் சட்டமூல வரைவை (பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இது அரசியலமைப்புக்கான 21 வது திருத்தமாகவே அமையும்)ஆகஸ்ட் முதலாம் திகதி அமைச்சரவை அதனை அங்கீகரித்திருந்தது. ஆனால், இரு மாதங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையிலும் சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்ற கட்சிகள் மத்தியில் விரிவான கலந்தாலோசனை நடத்தப்படவில்லை. விவாதம் குறித்து தீர்மானிக்கு முன்னதாக கருத்தொருமிப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் அக்கறைப்படவில்லைப் போலும். எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல, ஆளும் பொதுஜன பெரமுனவும் கூட மாறுபட்ட கருத்துக்களையே சட்டமூலம் தொடர்பில் அடிக்கடி வெளியிட்டு வந்ததைதை காணக்கூடியதாக இருந்தது.



மக்கள் கிளர்ச்சி தீவிரமடைந்திருந்த வேளையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் மீண்டும் 19 திருத்தத்தை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார். அது மாத்திரமல்ல, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு முயற்சியையும் கூட ஆதரிக் கத்தயாராயிருப்பதாகவும் அவர் கூறினார் என்பதையும் நாம் மறந்துவிடவில்லை.

அந்த வேளையில் 22வது திருத்தத்தை வரைந்த அதே நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவே இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலும் 22 வது திருத்தத்தை வரைந்திருக்கிறார். முன்னைய வரைவைப் போன்று தற்போதைய வரைவு இல்லை என்று கூறப்பட்டது. அந்த வரைவை நியாயப்படுத்திப் பேசிய விஜேதாசவே இந்த வரைவு குறித்து விளக்கங்களை அளித்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

அக்டோபர் 6,7 திகதிகளில் இந்த திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோது, விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அரசியல் சீர்திருத்த செயன்முறைகளுக்கு பெரிதாக ஒத்துழைப்பை வழங்குவதில் நாட்டமில்லாத அணுகுமுறையை எதிர்க்கட்சிகள் கடைப்பிடித்துவரும் நிலையில், ராஜபக்சாக்களின் பொதுஜன பெரமுனவும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வந்த நிலையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பாராளுமன்றத்தில் பெறுவது சாத்தியமில்லை என்று தெரிந்திருந்தும் கூட விவாதத்தை நடத்த ஏன் அரசாங்கம் முன்வந்தது என்ற கேள்வி அரசியல் அரங்கில் எழுந்தது.

கடந்த வார தொடக்கத்தில் 22 வது திருத்தச்சட்ட மூலத்துக்கு புதிய முட்டுக்கட்டைகள் வெளிப்பட ஆரம்பித்தன. இரட்டைக் குடியுரிமையை கொண்டிருப்பவர்கள் தேர்தல்களில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு வந்து அரசியல் பதவிகளை வகிப்பதை மீண்டும் தடை செய்யும் ஏற்பாடு அடங்கிய எந்தவொரு திருத்தத்தையும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிக்கமாட்டார்கள். ஏனென்றால் அந்த கட்சியை இயக்கிக் கொண்டிருக்கும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச இலங்கை குடியுரிமையையும் அமெரிக்க குடியுரிமையையும் கொண்டவர். தங்கள் தலைவருக்கு பாதகமாக அமையக்கூடிய எந்த ஏற்பாட்டையும் அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்பதால்தான் 22 வது திருத்தச்சட்ட மூலத்தை வெறுக்கிறார்கள் என்று பார்த்தால் இப்போது அவர்கள் வேறு காரணங்களையும் முன்வைக்கிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை அரசாங்க பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் திருத்தச்சட்டமூலம் கலந்தாலோசனைக்கு எடுக்கப்பட்டபோது அதை தற்போதைய வடிவில் ஏற்கத்தயாரில்லை என்று பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் பலரும் எதிர்ப்பு வெளியிட்டதாக கூறப்படுகிறது.

அரசியலமைப்பின் ஒற்றையாட்சி குணாம்சத்தை பாதுகாக்கக்கூடிய முறையில்தான் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும் என்று மாறாத ஒரு நிலைப்பாட்டை தங்கள் கட்சி கொண்டிருப்பதாக ஊடகங்களுக்கு கூறிய பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம், இடைக்கால ஏற்பாடுகளாக அரசியலமைப்புக்கு திருத்தங்கள் கொண்டுவரப்படக் கூடாது என்றும் சொன்னார்.

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் கொண்டுவரப்பட்ட பிறகு முழு அதிகாரத்துடனான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி காரணமாகவே நாட்டின் ஒற்றையாட்சித்தன்மை பாதுகாக்கப்படுகிறது. அதனால் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் எந்தவொரு திருத்தமும் ஒற்றையாட்சி தன்மை மீது தாக்கத்தைக் கொண்டிருக்கும். துண்டு துண்டாக அரசியலமைப்புக்கு திருத்தங்களைக் கொண்டுவருவதை விடவும் அரசியலமைப்பை முழுமையாக மாற்றுவதில்தான் கவனம் செலுத்தவேண்டும் என்று காரியவாசம் ஒரு விளக்கம் கூறினார்.



> “17, 18, 19, 20 என்று இந்த நான்கு திருத்தங்களும் மாறிமாறி முரண்பட்டவையாக இருந்தபோதிலும் இவற்றை எந்த அசௌகரியமும் இல்லாமல் ஆதரித்த பெருவாரியான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பலர் தற்போதைய பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கிறார்கள்.

இதனிடையே, பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திசாநாயக்க, நாட்டில் உறுதிப்பாட்டைப் பேணவும் தற்போதைய கட்டத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் அவசியம் என்று கூறினார்.

1988- 89 ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) ஆயுதக்கிளர்ச்சியை ஜனாதிபதி பிரேமதாசவும் விடுதலை புலிகளுடனான போரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் முடிவுக்கு கொண்டுவருவதற்கு அவர்களிடம் இருந்த நிறைவேற்று அதிகாரங்களே காரணம். ஜே.வி.பி. மற்றும் முன்னிலை சோசலிஸ்ட் கட்சி போன்றவை மீண்டும் நாட்டில் அராஜகத்தை தோற்றுவிக்கும் ஆபத்து இருப்பதால் அதை தடுக்க நிறைவேற்று அதிகாரங்கள் தேவை என்றும் அண்மைக்கால சரித்திரத்தில் எதேச்சாதிகார ஆட்சியாளர்களே நாடுகளை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். அதற்கு சிங்கப்பூர், சீனா, தென் கொரியா போன்ற நாடுகள் சிறந்த உதாரணம் என்றும் கேட்டுக் கேட்டு சலித்துப்போன வாதங்களையும் திசாநாயக்க கடந்தவாரம் முன் வைத்தார்.



60,000 க்கும் அதிகமான கிளர்ச்சியாளர்களைக் கொலைசெய்து ஜனாதிபதி பிரேமதாச கிளர்ச்சியை ஒடுக்கியதை இன்று வரவேற்றுப் பேசும் திசாநாயக்க, 1989 ஆம் ஆண்டில் முதற்தடவையாக பாராளுமன்றத்துக்கு வந்தபோது அன்றைய அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளை எந்தளவுக்கு கர்ணகடூரமாக சபையில் கண்டனம் செய்தார் என்பதை ஹன்சார்ட்டை புரட்டிப்பார்த்தால் புரிந்துகொள்ளமுடியும். இது அவரது சந்தர்ப்பவாத அரசியல் வாழ்க்கையின் இன்னொரு பக்கம்.

எதேச்சாதிகார ஆட்சியாளர்கள்தான் நாடுகளை முன்னேற்றினார்கள் என்றால் ஜனாதிபதி கோட்டாபய ஏன் தோல்வி கண்டார்? அவர் குறைந்தளவு எதேச்சாதிகாரம் கொண்டவராகவா இருந்தார்? திசாநாயக்கவிடம் விடை வேண்டி நிற்கும் கேள்வி இது.

பொதுஜன பெரமுனவிடமிருந்து வருகின்ற இத்தகைய கருத்துக்கள் 22 வது அரசியலமைப்பு திருத்தத்துக்கு அவர்களிடமிருந்து தொடர்ந்து முட்டுக்கட்டைகள் வரும் என்பதை வெளிக்காட்டுகின்றன. அடிப்படையில் அவர்கள் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதை விரும்பவில்லை. ஜனாதிபதியாக இன்னொரு ராஜபக்ச தலைமையில் ஆட்சியதிகாரத்துக்கு மீண்டும் வருவது குறித்து அவர்கள் கனவு காண்கிறார்கள்.

அதேவேளை, எதிரணி கட்சிகளிடம் இருந்தும் அடிக்கடி மாறுபட்ட கருத்துக்கள் வந்துகொண்டிருப்பதால் திருத்தச்சட்டமூலம் தொடர்பில் அவர்களது இறுதி நிலைப்பாட்டை அறிந்துகொள்ளுமாறு ஜனாதிபதி விக்கிரமசங்க, பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் புதன்று கேட்டிருந்தார். ஆனால், பிரதமர் அந்த கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினாரா இல்லையா என்பதை பற்றி செய்தி எதுவும் வரவில்லை.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சி தரப்பில் அமர்ந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த விடயத்தில் ஆரம்பத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருந்து விலகிவிட்டதாக ஜனாதிபதி உணர்கின்ற அதேவேளை ஜே. வி.பி.யின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க தங்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் சேர்க்கப்படாவிட்டால் திருத்தச் சட்ட மூலத்தை ஆதரிக்கப்போவதில்லை என்று அறிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதை தடைசெய்வதற்கும் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கும் பதில் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 6 மாதங்களாக வரையறை செய்வதற்குமான ஏற்பாடுகள் திருத்தச்சட்டமூலத்தில் சேர்க்கப்படவேண்டும் என்ற யோசனைகளை தாங்கள் முன்வைத்ததாக திசாநாயக்க தனது கட்சியின் தலைமையகத்தில் செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார்.**(09 ஆம் பக்கம் பார்க்க...)**

# 22 வது திருத்தம் நிறைவேற்றப்பட முடியாமல் போனால் பயனடையப்போகிறவர் ஜனாதிபதி ரணில் தான்!

> சிங்கள தேசியவாத சக்திகள் சிறுபான்மை இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு மாத்திரம் எதிரானவர்கள் அல்ல, அடிப்படையில் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் முற்போக்கான அரசியல் அபிலாசைகளுக்கும் விரோதமானவர்கள் என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது.

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியை நியமிப்பதற்கு பாராளு மன்றத்தை அனுமதிக்கும் தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடு திருத்தப்படவேண்டும். இந்த ஏற்பாடு பாராளுமன்றத்தினால் நியமிக்கப்படும் ஒருவர் சில வருடங்களுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியில் தொடருவதற்கு வழிவகுக்கிறது. இது மக்களின் இறைமையை பிரதிபலிப் பதாக இல்லை. அதனால் ஜனாதி பதி பதவி காலியாகும் பட்சத்தில் தற்காலிக ஜனாதிபதியாக ஒருவரை 6 மாதங்களுக்கு நியமித்துவிட்டு புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கு தேர்தல் நடத்தப்படக்கூடியதாக ஏற்பாடு அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று தாங்கள் யோசனையை முன்வைத்திருப்பதாக ஜே.வி.பி. தலைவர் கூறினார்.



இது இவ்வாறிருக்க, இன்னொரு புறத்தில் 22 வது திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் விவாதிக் கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்ப டும்போது நாட்டுப்பிரிவினைக்கு எதி ராக தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு அடிப்படையிலான பாதுகாப்பு உத்தரவாதங்களை பலவீனப்படுத்தக்கூடிய திருத்தங்களை குழுநிலையில் (நீதித்துறையின் ஒப்புதலின்றி) அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக கிளம்பியிருக்கும் அச்சம் இந்த திருத்தச்சட்டமூலத்துக்கு வெளிக்காட்டப்படும் பெருமளவு எதிர்ப்புக்கு காரணம் என்று சிங்கள தேசியவாத சக்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் எழுதுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

13 வது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி சமஷ்டி முறைக்கு வழி திறந்துவிடுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, இந்தியா மற்றும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக வல்லாதிக்க நாடுகளிடம் இருந்து ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு நெருக்குதல் கொடுக்கப்படுவதாக எதிர்ப்பாளர்கள் வாதிடுவதாகவும் அந்த வாதம் ஆதார அடிப்படை அற்றது அல்ல என்றும் அந்த பத்திரிகைகள் கூறுகின்றன. கடந்த காலத்தில் அரசாங்கங்கள் சட்டமூலங்களைக் கொண்டுவந்த போது பாராளுமன்றத்தில் குழு நிலையில் கேள்விக்கிடமான பிரிவுகளை புகுத்தி தங்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு என்றும் அவை குறிப்பிட்டிருக்கின்றன.

இத்தகைய பின்புலத்தில், கடும் போக்கு சிங்கள தேசியவாத முக்கியஸ்தர்களில் ஒருவரான பேராசிரியர் நளின் டி சில்வா கடந்தவாரம் தெரிவித்த கருத்துக்களை நோக்கவேண்டியிருக்கிறது.

குறிப்பிட்ட எந்தவொரு சட்டமூலத்துக்கும் பாராளுமன்றத்தில் குழுநிலையில் அறிமுகப்படுத்தப்படக்கூடிய திருத்தங்களுக்கும் நிச்சயமாக உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.


தற்போது எந்தவொரு சட்டமூலமும் பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெற்றதும் அது அரசியலமைப்புக்கு இசைவானதாக இருக்கிறதா இல்லையா என்று உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்காக அனுப்பப்படுகிறது. குறிப்பிட்ட சட்ட மூலத்தின் ஏதாவது ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு முரணாக இருந்தால் அதை எவ்வாறு நிறைவேற்றவேண்டும் என்ற விதப்புரைகளை உயர்நீதிமன்றம் செய்கிறது. அதன் பிரகாரம் அரசியலமைப்புக்கு இசைவான முறையில் அந்த ஏற்பாடுகளில் குழுநிலையின்போது அரசாங்கம் மாற்றங்களை செய்து நிறைவேற்றுவதே வழமையான நடைமுறையாக இருந்துவருகிறது.

அவ்வாறு செய்யும்போது சில அரசாங்கங்கள் அவற்றின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசியலமைப்புக்கு முரணானவையாக அமையக்கூடிய சில ஏற்பாடுகளை சட்டமூலங்களுக்குள் ஒளிவுமறைவாக புகுத்தியதாக ஏற்கெனவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இலங்கையில் சட்டமூலம் ஒன்று நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக நீதித்துறையின் அபிப்பிராயத்தை பெறுவதற்காக அனுப்பப்படுகிறதே தவிர, அது சட்டமாக நிறைவேற்றப்பட்ட பிறகு நீதித்துறை மீளாய்வுக்கு அரசியலமைப்பில் எந்த ஏற்பாடும் இல்லை.

22 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் கிளப்பப்படுகின்ற அச்சத்தின் பின்னணியில் பேராசிரியர் நளின் டி சில்வா, குழு நிலையில் திருத்தியமைக்கப்பட்ட சட்டங்களும் நீதித்துறையின் மீளாய்வுக்கு அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் கிடைத்த பின்னரே சபாநாயகர் கையெழுத்திட்டு அதை சட்டமாக பிரகடனம் செய்யவேண்டும். உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரம் கிடைக்கும் வரை திருத்தியமைக்கப்பட்ட சட்டமூலத்தில் சபாநாயகர் கையழுத்திடுவதை தடுக்கும் வகையில் அரசியலமைப்பு திருத்தம் ஒன்று கொண்டுவரப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கிறார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு கோரிக்கை மும்முரமாக எழுப்பப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இலங்கையின் ஐக்கியம், சுயாதிபத்தியம்,ஒற்றையாட்சித்தன்மை ஆகியவற்றுடன் ஜனாதிபதியின் அதிகாரங்களை இன்றியமையாதவையாக தொடர்புபடுத்துவது சிங்கள தேசியவாத சக்திகளின் சுபாவமாகும்.



அத்துடன் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவதானால் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குகின்ற ஏற்பாடுகளைக்கொண்ட 13 வது அரசியலமைப்பு திருத்தத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும். ஏனென்றால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் அவரால் நேரடியாக நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களூடாகவே மாகாணங்களில் செயற்படுத்தப்படுகிறது. மாகாணங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி ஒற்றையாட்சிக்கு ஆபத்து வந்துவிடும் என்ற வாதத்தை முன்வைப்பதையும் அந்த சக்திகள் வழக்கமாக கொண்டுள்ளன. ஏதோ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இல்லையென்றால் மாகாணங்களை நிருவகிக்க பாராளுமன்ற ஆட்சிமுறையினால் ஆளுநர்களை நியமிக்கமுடியாது என்பது போல.

இந்த வாதத்தைப் பொறுத்தவரை விசித்திரம் என்னவென்றால் இவ்வாறாக ஜனாதிபதி ஆட்சிமுறைக்கும் 13 வது திருத்தத்துக்கும் இடையே ஒரு முடிச்சைப் போட்டு அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதை கடுமையாக எதிர்ப்பதில் முன்னணியில் நின்றுவரும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச வரைந்த 22 வது திருத்தச் சட்டமுலத்தை எதிர்ப்பதற்கு அவர் முன்வைத்த வாதமே பயன்படுத்தப்படுகிறது. அவர் நிச்சயமாக சிங்கள தேசியவாத சக்திகளை ஏமாற்றமாட்டார். அதனால் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகளை எதிர்ப்பதை -- அதுவும் நாட்டுமக்கள் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க



வேண்டும் என்று கிளர்ச்சி செய்த பின்புலத்தில் -- சிங்கள மக்கள் மத்தியில் நியாயப்படுத்த இனவாத நோக்குடன் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

சிங்கள தேசியவாத சக்திகள் சிறுபான்மை இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு மாத்திரம் எதிரானவர்கள் அல்ல, அடிப்படையில் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் முற்போக்கான அரசியல் அபிலாசைகளுக்கும் விரோதமானவர்கள் என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு வாக்குறுதிகள் மீறப்பட்டதற்கு ஒரு வரலாறு இருப்பதைப் போன்றே ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கான அரசியலமைப்புத்திருத்த செயன்முறைகளுக்கும் ஒரு வரலாறு இருக்கிறது.

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கவின ஆட்சிக்காலத்தில் 2001 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 17 வது அரசியலமைப்பு திருத்தமே ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட முதல் நடவடிக்கையாகும். முக்கியமான அரச நிறுவனங்களை அரசியல்மய நீக்கம் செய்வதற்கு அரசியலமைப்பு பேரவையும் சுயாதீன ஆணைக்குழுக்களும் நிறுவப்படுவதற்கு அது வழிவகுத்தது. ஆனால் அந்த பேரவையோ அல்லது ஆணைக்குழுக்களோ உகந்த முறையில் செயற்பட நிறைவேற்று அதிகாரம் அன்று ஒழுங்காக ஒத்துழைத்தது என்று கூறிவிடமுடியாது.

ஒன்பது வருடங்களுக்கு பிறகு அந்த அரசியலமைப்புத் திருத்தம் ரத்துச்செய்யப்பட்டு மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது பதவிக்காலத்தின்போது 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் அதிகாரங்களை மீளநிலைநிறுத்த 18 வது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

மீண்டும் மைத்திரி - ரணில் அரசாங்க காலத்தில் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க 19 வது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன் மூலமாக பிரதமரினதும் பாராளுமன்றத்தினதும் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட போதிலும், ஜனாதிபதியும் பிரதமரும் அவர்களது அரசியல் நலன்களுக்கு இடையிலான முரண்பாடுகள் காரணமாக இரு அதிகார மையங்களாக செயற்பட்டதனால் அரச நிருவாகம் சீர்குலைவுக்குள்ளானது.

பிறகு மீண்டும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் 2020 பிற்பகுதியில் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்க 20 வது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன் மூலமாக முன்னைய ஜனாதிபதிகள் சகலரையும் விட அதிகூடுதல் அதிகாரங்களை தன்வசம் கொண்டவராக கோட்டாபய விளங்கினார். ஆனால், அவரே படுமோசமாக தோல்வி கண்ட இலங்கை ஜனாதிபதியாக இன்று அபகீர்த்திக்குள்ளாகி நிற்கிறார். முன்னைய எந்த இலங்கை ஜனாதிபதியும் பதவிக்காலத்தின் இடைநடுவில் பதவியில் இருந்து அதுவும் மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் நாட்டை விட்டு வெளியேறி பதவி துறந்ததில்லை.

மேற்கூறப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட காலகட்டத்தை திரும்பிப்பார்க்கும்போது இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் மிகவும் நகைப்புக்கிடமான ஒரு தொடர் நடத்தையை அவதானிக்கமுடியும். அதாவது 17, 18, 19, 20 என்று இந்த நான்கு திருத்தங்களும் மாறிமாறி முரண்பட்டவையாக இருந்தபோதிலும் இவற்றை எந்த அசௌகரியமும் இல்லாமல் ஆதரித்த பெருவாரியான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பலர் தற்போதைய பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கிறார்கள். தற்போதைய அரசியலமைப்புத் திருத்தம் சபையில் வாக்கெடுப்புக்கு வருமானால் இவர்களின் அப்பட்டமான சந்தர்ப்பவாத அரசியலை மீண்டும் ஒரு தடவை எம்மால் காணக்கூடியதாக இருக்கும்.

22 வது திருத்தச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட முடியாமல் போனால் அதனால் உடனடியாக பயனடையப்போகிறவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். முழு அதிகாரங்களுடன் அவர் ஜனாதிபதியாக அடுத்த இரு வருடங்களுக்கு இருப்பார்.

மக்கள் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பின்னர் அரசியல் வர்க்கம் அதன் வழமை நிலைக்கு திரும்பிவிட்டது என்பதையே இந்த நிகழ்வுப்போக்குகள் எல்லாம் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன.

## ஜெனிவா விவகாரம்:

பனங்காட்டான்

# அலி சப்றியின் 'விசுவாச' அரசியலும், ரணிலின் அசாதாரண மௌனமும்!



**50:1 இலக்கத் தீர்மானம் ஜெனிவாவில் 17 மேலதிக வாக்குகளால் மட்டும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், போர்க்குற்றம் புரிந்த படைத்தரப்பினரை நாட்டுக்கு வெளியே சட்டத்துக்குட்படுத்த இத் தீர்மானம் வாய்ப்பளிப்பதால், தமது எஜமானரான ராஜபக்சக்களை காப்பாற்றுவதற்காக விசுவாச அரசியலை அமைச்சர் அலி சப்றி மேற்கொண்டு வருகிறார். ஆனால், நாட்டின் ஜனாதிபதி ரணில் ஜெனிவா பற்றி எதுவும் அறியாதவர் போன்று அசாதாரண மௌனம் சாதித்து வருகிறார்.**

ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 50 வது அமர்வின் முதலாம் திருவிழா முடிவடைந்து விட்டது. எதிர்பார்க்கப்பட்ட இலங்கை மீதான தீர்மானம், எதிர்பார்த்ததிலும் பார்க்கக் குறைவான - 13 மேலதிக வாக்குகளால் மட்டும் நிறைவேறியுள்ளது. இந்தப் பதின்மூன்று என்ற இலக்கம் எல்லாவற்றிலும் ஏதோவொரு வகையில் தலையைக் காட்டிக் கொண்டே வருகிறது.

இலங்கைக்கு எப்போதும் உதவிவரும் பிரித்தானியா தலைமையில் அமெரிக்கா உட்பட ஏழு நாடுகளின் அனுசரணையில் இத்தீர்மானம் வரையப்பட்டு, இரு தடவைகள் திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர் இறுதி வரைபு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. மொத்தம் 193 நாடுகளில், ஐந்து பிராந்தியங்களின் வழியாக தெரிவு செய்யப்பட்ட 47 நாடுகளுக்கே இங்கு வாக்களிப்புத் தகுதியுண்டு.




193 நாடுகளில் 37 நாடுகள் தீர்மானத்துக்கு இணைஅனுசரணை வழங்கியதை இங்கு குறிப்பிட வேண்டும். இந்த மாதம் 6ம் திகதி இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது 47 நாடுகளில் 20 தீர்மானத்தை ஆதரிக்க, ஏழு நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 20 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இதனை மத்தியஸ்தம், நடு நிலை என்று விருப்புக்கேற்றவாறு கூறிக்கொள்ளலாம்.

தீர்மானம் பேரவையில் முன்வைக்கப்படுவதற்கு முன்னரேயே, இதனைத் தங்களால் தோற்கடிக்க முடியாதென்பது இலங்கைக்குத் தெரியும். தீர்மானம் வென்றாலும் சரி, தோற்றாலும் சரி இதனைத் தாங்கள் ஏற்கப் போவதில்லையென்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி கடந்த மாத ஆரம்பத்தில் பிரகடனம் செய்ததினூடாக இதனை அறிய முடிந்தது.

இருப்பினும், தோற்கடிக்கும் நப்பாசை காரணமாக இறுதிவரை தங்களின் நட்பு நாடுகளை நாடி இலங்கை ஆதரவு கேட்டது. ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சி.ஏ.சந்திரப்பெரும வாக்கெடுப்புக்கு முதல் நாளான ஐந்தாம் திகதி அங்கத்துவ நாடுகளின் உறுப்பினர்களைச் சந்தித்து ஆதரவு கேட்ட பின்னர் தெரிவித்த கருத்து இலங்கையின் இயலாமையை வெளிப்படுத்தியது.

2012ம் ஆண்டில் முதன்முறையாக இலங்கை மீதான தீர்மானம் ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டபோது 47ல் 15 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக - அதாவது தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. 2013ல் இந்த எண்ணிக்கை 13 ஆகி, 2014ல் 12 ஆகி, 2021ல் 10 ஆகி, இம்முறை 7 ஆகியுள்ளது.

அதேசமயம், தீர்மானத்துக்கு ஆதரவான வாக்குகளும் இறங்குமுகமாகிக் கொண்டே வந்தன. 2012ல் 24 நாடுகள் ஆதரித்தன. 2013ல் இது 25ஆக அதிகரித்ததாயினும், அதன் பின்னர் 2014ல் 23 ஆகவும், 2021ல் 22 ஆகவும் இறங்கி, இம்முறை 20 ஆகியுள்ளது. மறுபுறத்தில், வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகளின் எண்ணிக்கை மேலோங்கி வருகிறது. இம்முறை இந்தியா, ஜப்பான், நேபாளம், இந்தோனேசியா, மலேசியா, குவைத், கட்டார், ஐக்கிய அரசு ராஜ்ஜியம் உட்பட 20 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

ஐந்து பிராந்தியங்களிலிருந்தும் உறுப்புரிமை பெறும் நாடுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மாற்றம் பெறுவதால், அந்தந்த நாடுகளின் ஆட்சியாளர்களது அரசியல் கொள்கைகளுக்கேற்ப வாக்களிப்பு எண்ணிக்கையில் ஏற்ற இறக்கங்கள் இடம்பெறுவதை இந்த மாற்றத்தினூடாக காணமுடிகிறது.

2014இலும் 2021இலும் தீர்மானத்தை ஆதரித்த நாடுகளின் எண்ணிக்கை முறையே 23ஆகவும் 22ஆகவும் இருந்ததை வைத்து, இலங்கை அரசு தப்புக்கணக்கொன்றை முன்வைத்தது. அதாவது இவ்விரு ஆண்டுகளிலும் எதிர்த்தும், வாக்களிப்பைத் தவிர்த்தும் அடையாளப்படுத்திய நாடுகளின் கூட்டு எண்ணிக்கை, ஆதரித்த எண்ணிக்கையை விட கூடுதலாக இருந்ததை வைத்து, தீர்மானத்தை ஆதரிக்காத நாடுகளே அதிகமென்று அன்றைய அமைச்சர்கள் ஜி.எல்.பீரிசும், தினேஸ் குணவர்த்தனவும் அறிவித்து அப்பாவி சிங்கள மக்களின் தலையை சுற்றினார்கள். நல்லவேளை இம்முறை அவ்வாறான கணக்கை அலி சப்றி இதுவரை காட்டவில்லை.

ஜெனிவாவின் நிரந்தரப் பிரதிநிதி சந்திரப்பெரும தனது பணிகளை நேர்த்தியாக மேற்கொள்ளவில்லை என்ற காரணத்தால் உடனடி மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும், இவரது இடத்துக்கு நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதுவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள 50:1 தீர்மானம் எல்லாமாக 19 அம்சங்களை உள்ளடக்கியது. இவற்றுள் அநேகமானவை 30:1, 40:1 இலக்கத் தீர்மானங்களை வலியுறுத்துபவை. நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், உண்மையைக் கண்டறிதல் என்று இதற்கு பொதுத் தலைப்பு இடப்பட்டுள்ளது.

50:1 தீர்மானமானது மனித உரிமைப் பேரவை ஆணையாளராகவிருந்த பச்சிலற் அம்மையார் கடந்த இரண்டு ஆண்டுகளாக சுட்டிவந்த ஒரு விடயத்துக்கு அதி முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அது போர்க்குற்றத்துக்கான பொறுப்புக்கூறல் விசாரணை. அத்துடன், கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்கால பொருளாதாரக் குற்றத்துக்கும் (ஊழல், மோசடி) விசாரணை கோருகின்றது.

நிறைவேற்றப்பட்டுள்ள 19 தீர்மானங்களில் எட்டாம் இலக்கத் தீர்மானத்தை எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாதென்று அமைச்சர் அலி சப்றி மீண்டும் மீண்டும் பல தடவை வலியுறுத்திக் கூறியுள்ளார். அந்தத் தீர்மான வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது: "பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் நோக்கத்தில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள், துஸ்பிரயோகங்கள் சம்பந்தமான குற்றங்களுக்குரிய ஆதாரங்களைச் சேகரித்தல், பாதுகாத்தல், பகுப்பாய்வு செய்தல் என்பவற்றோடு சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் கடுமையான மீறல்களுக்கு பேரவையின் உறுப்பு நாடுகளில், தகுதியான அதிகார பலமுடன் ஒருங்கிணைக்கும் திறனை விரிவுபடுத்துகிறது" என்பது இந்த வாசகம்.

இதனைச் செயற்படுத்துவதற்கான முன்னேற்பாடாக ஆயிரக்கணக்கான ஆதரவு ஆவணங்களை ஆணையாளர் அலுவலகம் ஏற்கனவே சேகரித்துள்ளது. இதற்கான தனியான செயலகம் உருவாக்கப்பட்டு அறிக்கையாளர்களும், அலுவலர்களும் நியமனமாகி இயங்கி வருகின்றனர். இதற்குத் தேவையான நிதியை வழங்குமாறு உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் புரிந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ள நான்கு டசினுக்கும் அதிகமான படைத் துறையினர் மீது, ஒவ்வொருவர் மீதும் தனித் தனியான நடவடிக்கை எடுக்க இந்த எட்டாம் அம்சத் தீர்மானம் வழிவகுக்கிறது. பயணத்தடை, பணியிட மறுப்பு, நுழைவு விசா மறுப்பு போன்ற எந்த நடவடிக்கையையும் இவர்கள் மீது உறுப்பு நாடுகள் எடுக்க முடியும்.

இலங்கை அரசு பல தடவைகள் உறுதியளித்த உள்நாட்டு விசாரணை சுயாதீனமாக, பாரபட்சமற்ற முறையில், வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெறாததாலும், ஏற்கனவே இணைஅனுசரணை வழியாக ஏற்கப்பட்ட சர்வதேச நீதிப்பொறிமுறை மறுக்கப்பட்டதாலும் ஜெனிவா அடுத்தகட்ட நடவடிக்கையாக எட்டாவது அம்சத்தைக் காட்டுகின்றது.

அதேவேளை முன்னைய தீர்மானங்களைப் போன்று இம்முறையும் இலங்கை தனது கடப்பாட்டினை நிறைவு செய்ய 2024 செப்டம்பர் வரை, அடுத்த இரண்டாண்டுகளுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுகணமே இதனை மீண்டும் நிராகரித்துள்ளார் அமைச்சர் அலி சப்றி. இதனை அவரது விசுவாச அரசியலாகவே நோக்க வேண்டியுள்ளது.

ராஜபக்சக்களால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டவர் அலி சப்றி. ஜெனிவா தீர்மானத்துக்கு இணங்க போர்க்குற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின் தமது எஜமானர்களே - முக்கியமாக கோட்டாபயவும் அவரது முன்னாள் படைத்துறை சகாக்களும் தண்டிக்கப்படுவர் என்கின்ற காரணத்தால் அதனை முழுமையாக எதிர்க்க வேண்டியவராகி - அந்த விசுவாசத்தில் இதனை முழுமையாக எதிர்த்து வருகிறார் அலி சப்றி.

ஆனால், நாட்டின் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க, ஜெனிவா தீர்மானங்கள் தமக்குத் தெரியாதது போலவும், அவை தம்முடன் சம்பந்தப்படாதவை போலவும், அதனை அலி சப்றியே பார்த்துக் கொள்ளட்டும் என்பது போலவும் அசாதாரண மௌனம் சாதித்து வருவதன் காரணம் இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடியது. இந்தத் தீர்மானங்களை உலக நாடுகள் நடைமுறைப்படுத்துமாயின், பொதுஜன பெரமுன தலைவர்களின் எதிர்கால அரசியல் நிர்மூலமாகிவிடும் என்பது அவருக்குத் தெரியும். அதனால்தான் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்படும் பொழுது ரணில், நாடாளுமன்றில் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் சிறப்புரை ஆற்றிக் கொண்டிருந்தார்.



ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரை காத்திருந்த கொக்கு, இன்னமும் எதை நோக்கிக் காத்திருக்கிறதோ?

# தொடரும் எல்லை மீறல்கள்... கண்டுகொள்ளப்படாதது ஏன்?

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி வடக்கு மீனவர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்னை. இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணுமாறு மீனவர்கள் அன்றாடம் போராடுவதும் வழக்காகிவிட்டிருந்தது. இந்தப் பிரச்னைக்கு காண்பதற்காக இரு தரப்பு பேச்சு நடத்தப்பட்டபோதும் அது முடிவற்ற ஒன்றாகவே நீள்கிறது. அண்மைக்காலத்தில் அத்தகையதொரு பேச்சுக்கான இணக்கத்தை எட்டுவதற்கே போராட்டங்கள் - பல சுற்றுப் பேச்சுக்களை நடத்த வேண்டிய துர்பாக்கிய நிலைமையே தொடர்கிறது.

இது ஒருபுறமிருக்க, பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்ட பிற காரணிகளால் வடக்கு மீனவர்களின் தொழில் முடங்கிப் போய்விட்டது. இந்நிலையில், அன்றாடம் எதிர்கொண்ட இந்திய மீனவர்களின் எல்லைதாண்டல் பிரச்னை தொடர்பில் எவரும் பேசுவார் இல்லை. ஆங்காங்கே ஒரு சில இந்திய படகுகள் கடற்படையால் பிடிக்கப்படும் செய்திகள் மட்டும்தான் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல் இருக்கிறது என்பதை கோடி காட்டுவதாக இருக்கிறது.

எனினும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் - எல்லைதாண்டல்கள் குறித்து உரக்கக் குரல் எழுப்பிய - போராட்டங்களை முன்னின்று நடத்திய கடற்றொழில் சங்கங்கள் - சமாசங்கள் - சம்மேளனம் என்பன இப்போது இது விடயத்தில் மௌனிகளாகிவிட்டன. இந்நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து மீனவர்கள் இங்கு மனந்திறக்கிறார்கள்...!

## எமது வளம் இந்தியர்கள் வசம் நாம் பட்டினி சாவு அபாயத்தில்!

**ஜே. ஜெராட்**
கடற்றொழிலாளி



வடக்கு கடல் பரப்புக்குள் இந்திய இழுவைமடி ட்றோலர்கள் எல்லை மீறி வருகின்றபடியால் எமது கடற் தொழிலாளர்கள் தொழில்செய்ய முடியவில்லை.

எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்கள் மிகவும் வலுவுள்ள இயந்திரத்தை பயன்படுத்தி எமது கடல் வளத்தை சுரண்டி செல்கின்றார்கள். அதனால் எமது தொழிலாளர்கள் பட்டினியால் இறக்க வேண்டிய நிலை ஏற்படப்போகின்றது

ஒருநாளைக்கு 40 ஆயிரம் ரூபாய் செலவழித்து தொழிலுக்கு சென்றால் 30 ஆயிரம் ரூபாய்க்குதான் தொழில் நடக்கின்றது. குருநகர் பகுதியில் 400 மீன்பிடி படகுகள் உள்ளன. தற்போதைய நிலையில் அரைவாசி படகுகள் மாத்திரமே தொழிலுக்கு செல்கின்றன.

இந்திய இழுவை மடிதொழிலை நிறுத்தினால் மாத்திரமே வடபகுதி மீனவர்கள் வாழ முடியும். எமது கடல் வளத்தை முற்றாக அழித்து செல்கின்றார்கள். எமது கடல் வளத்தில் தொழில் செய்ய முடியாது. ஆனால் இந்தியர்கள் வந்து தொழில் செய்து முழு வருமானத்தையும் அள்ளி கொண்டு போகின்றார்கள்.

அத்துடன், எமது வலைகள் மட்டுமல்ல பல சொத்துகளையும் அழித்துவிட்டு செல்கின்றார்கள். கடந்த வாரம் கடலில் நான் நேரடியாக இந்திய படகுகளின் வருகையைக் கண்டேன். ஆனால் இன்றும் (வியாழக்கிழமை) நேற்றும் அவர்களின் வருகையை காணவில்லை. காற்று பிரச்னையோ வேறு ஏதும் பிரச்னையோ தெரியவில்லை.

அவர்களுடைய பகுதியிலேயே மீன் அகப்பட்டால் இந்த பகுதிக்கு வர மாட்டார்கள். அவர்கள் கடந்த இரண்டு மூன்று நாட்களாக எமது எல்லைக்குள் வராதபடியினால் ஓரளவு தொழில் பரவாயில்லை

எமது படகுகளில் செல்லும் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும். எரிபொருள் வாங்க வேண்டும். எரிபொருளும் விலை அதிகரித்துள்ளது. எமக்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஆனால், அந்த அளவுக்கு தொழில் கிடைப்பதில்லை. வழமையாக இந்திய ட்றோலர்களைக் கண்டால் நாங்கள் விலகிதான் செல்ல வேண்டும். இந்திய ட்றோலர்களின் வேகமும் பயங்கரமான உருவமும் எமக்கு பயமாகவே இருக்கும். அவர்கள் எம்மை நோக்கி வந்தால் நாங்கள் வேறு திசையில் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்தோடு இந்திய படகு எமது படகுகளுக்கு அருகே வந்தால் வலையை அறுத்து விட்டு சென்று விடுவார்கள். எமது தொழில் இவ்வாறு செல்லுமாக இருந்தால் பட்டினியால் சாகவேண்டிய நிலை ஏற்படும். அவர்களுடைய படகு வரும் போது அலை அடித்தாலே எமது படகு தாண்டு விடும். எமது மீன்வளத்தை இந்திய மீனவர்கள் முழுமையாக அனுபவிக்கின்றார்கள். எமது கடலின் வளத்தை பயன்படுத்தமுடியாது எமது தொழிலாளர்கள் பட்டினி சாவை தழுவ வேண்டிய நிலை ஏற்படப்போகின்றது இதுதான் உண்மை.

## 300-400 இந்திய படகுகளை கடலில் நான் கண்டேன்

**எஸ். ஞானசேகரம்**
ட்றோலர் தொழிலாளி,
குருநகர்.



28 ஆம் திகதி நான் தொழிலுக்கு செல்லும் போது இந்திய இழுவைமடி படகுகளைக் கண்டேன். இந்திய படகுகள் எமது கடல் பிரதேசத்துக்குள் வந்தன. அதன் பிறகு வரவில்லை. கடந்த மூன்று நாட்களாக இந்திய படகுகள் தமது வருகையை நிறுத்திவிட்டார்கள்.

தொழிலுக்கு போய் வந்தபோது கடைசியாக 28ஆம் திகதி நிறைய இந்தியப் படகுகள் வந்திருந்தன. வழமையாக இந்திய மீனவர் படகுகள் கூட்டமாக வரும்போது கடற் படையினர் சென்று கலைப்பார்கள். அவ்வாறு கலைத்தாலும் கட்டுப்படுத்த முடியாது. கடற்படையினரில் நாங்கள் பிழை சொல்ல முடியாது.

நிறைய படகுகள் கூட்டம் அதாவது 300 முதல் 400 படகுகள் ஒன்றாக இணைந்து வரும். சில படகுகள் நமது எல்லைக்குள் வந்துவிடும் அந்த நிலையில்தான் இந்திய படகுகள் கடற்படையினரால் கைது செய்யப்படுவது வழமை. இந்திய இழுவை படகுகள் எம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள். எமது வளத்தை சூறையாடுவதுதான் பெரும் பிரச்னை.

300 - 400 படகுகளில் அதாவது எமது படகுகளை விட 5 மடங்கு வேகமான படகுகளில் வந்து எமது வளத்தை சுரண்டுகின்றார்கள். பெரிய வலுவான இயந்திரங்கள் கொண்டு வருகின்றார்கள். அவர்களும் இரண்டு சிலிண்டர் இயந்திரத்துடன் வந்தால் எமக்கு பிரச்னையில்லை. ஆனால், அவர்கள் பெரிய சிலிண்டர் உள்ள படகுகளை கொண்டு வருகின்றார்கள் - அதாவது அவர்களது படகுகளை கண்டால் நாங்கள் நாங்களாகவே ஒதுங்கி விட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எமது ட்றோலர் தொழிலை பொறுத்த வரை அவர்களைக் கண்டால் நாங்கள் ஒதுங்கி செல்கின்றோம் அதாவது அவர்களின் பெரிய படகுகளை கண்டாலே நாங்கள் பயப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. வழமையாக இந்திய இழுவை படகுகள் காணப்பட்டால் கடற்படையினர் ஓடிச்சென்று கலைப்பார்கள் அவர்கள் கடற்படையினரின் படகுகளுடன் ஒடக்கூடிய வலுவுள்ள படகுகளுடன் தொழிலுக்கு வருகின்றார்கள்.

கடற்படையினரால் முற்றாக கட்டுப்படுத்த முடியாது. அவர்களின் படகுகளை பார்த்தாலே மிகவும் பயமாக இருக்கும் அவர்களும் எம்மை போல கடற் தொழிலாளர்கள் தான் ஆனால் எமது கடல் வளத்தை பெரிய இயந்திரங்களை கொண்டு வந்து சூறையாடுவதையே எதிர்க்கின்றோம்.




## இந்திய மீனவரின் அத்துமீறல் மூடி மறைக்கப்படுகின்றதா?

**வி. ஜெ. நிதர்சன்**
வத்திராயன்,
வடமராட்சி கிழக்கு.



மீன்பிடியை பிரதான வாழ்வாதாரமாக கொண்டது எங்களுடைய வடமராட்சி பிரதேசம். எங்களுடைய மீனவ தொழிலுக்கு ஆபத்து விளைவிக்கும் முகமாக பல காலங்களாக இந்திய இழுவை படகுகள் எமது கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களை தாக்கியும் அவர்களின் தொழில்களை நாசம் செய்தும் வருவது அனைவரும் அறிந்ததே.

கடந்த வருடம் இவர்களின் அத்துமீறலும் கொடூர செயல்பாடுகளும் அதிகரித்து இவர்களால் தாக்கப்பட்டு எமது கிராமத்தில் இரண்டு மீனவர்கள் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து பூதாகரமாக வெடித்த இந்தப் பிரச்னை ஒட்டுமொத்த தமிழ் மீனவர்களின் போராட்டத்தின் மூலம் சர்வதேசம் வரையில் சென்று இந்திய அரசுடன்மீண்டும் பேச்சுக்கள் நடத்தி இனி அவர்கள் அத்துமீறி உள்நுழைய மாட்டார்கள் என்ற அறிவிப்பு எமது மீன்பிடி அமைச்சிடமிருந்து இருந்து வாய்மொழியாக கிடைத்தமையை தொடர்ந்து போராட்டங்கள் மீனவர்களால் கைவிடப்பட்டன.

இதற்கு பிற்பாடு இந்திய இழுவை படகுகள் எமது கடற்பரப்புக்குள் உள்நுழைவது இல்லையா? அல்லது அது மூடி மறைக்கப்படுகின்றதா? இது தொடர்பாக கடற்றொழில் சமாசங்கள், சம்மேளனங்கள் எந்தவிதமான கருத்துக்களும் முன்வைக்காதது ஏன் என்று பல கேள்விகள் எழுந்துள்ளன.

என்னைப் பொறுத்தவரையில் கடற்றொழில் அமைப்புக்கள், சமாசங்கள், சம்மேளனங்கள் இதுபற்றி இனிப் பேசமாட்டார்கள். காரணம் என்னவென்றால் சென்ற வருட போராட்டத்தின் பின்பு போராட்டங்களை முன்னின்று நடத்திய சமாசங்கள், சம்மேளனங்களை கடற்றொழில் அமைச்சர் போராட்டம் முடிந்த பின்பு சந்தித்து பேசியமை அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்த செய்தியாகும். அங்கே என்ன பேசப்பட்டது என்பது மீனவர்களுக்கு தெரியாது உயர்மட்ட அழுத்தங்கள் அவர்களுக்கு அதிகமாக இருக்கின்றன என்றே நான் கருதுகின்றேன். அத்துடன் அமைச்சர் சார்ந்தவர்கள் பதவிகளில் இருப்பதாக தெரியவருகின்றது இது பல மீனவர்களின் சந்தேகமாக உள்ளது.

ஆனாலும் இந்த கேள்விகளுக்கு மீனவர்கள் சார்பான விளக்கம் யாதெனில் தற்கால பொருளாதார பிரச்னையால் நாட்டில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடும் நிலவுவது அனைவரும் அறிந்ததே. இதனால் மீனவர்களுக்கு போதியளவு மண்ணெண்ணெய் கிடைக்காததால் அவர்கள் முதல் போன்று வழமையான தொழிலை மேற்கொள்வதில்லை. இருக்கும் எண்ணெயை வைத்து அதிக தூரம் போகாமல் கரையிலேயே தொழில் செய்கின்றனர்.

இன்னும் சிலர் அதுவும் செய்வதில்லை உயர செல்லாத காரணத்தால் இந்திய இழுவை படகுகள் எமது கடற்பரப்புக்குள் நுழைகின்றனவா? என்று மீனவர்களுக்கு தெரியாது மீண்டும் நிலைமை சரியாகி வழமை போன்று தொழில் செய்வதற்கு மீனவர்கள் சென்றால் உண்மை நிலைப்பாடு தெரியவரும்.

மீனவர்கள் அமைதியாக இருப்பதற்கு காரணம் தொழில் நடைபெறாதது மட்டுமே மீண்டும் அவர்கள் அத்துமீறி நுழைவது மீனவர்களுக்கு தெரியவந்தால் சமாசங்கள் - சம்மேளனங்களை தாண்டியும் தீர்வு கிடைக்கும் வரைக்கும் மீனவர்களின் போராட்டம் தொடங்கும்.

# இளமை திரும்பும் ஸ்ரேயா

நடிகை ஸ்ரேயா தன் இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் தொடர்ந்து கவர்ச்சிப் படங்களை பதிவேற்றி வருகிறார்.

உனக்கு 20 எனக்கு 18 திரைப்படம் மூலம் அறிமுகமான ஸ்ரேயா, ரஷ்யவை சேர்ந்த விளையாட்டு வீரரை திருமணம் செய்தார். அதன் பின் திரையுலகிலிருந்து விலகியிருந்தார்.

இந்நிலையில், சமீப காலமாக ஸ்ரேயா தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தொடர்ந்து கவர்ச்சிப் படங்களை பதிவேற்றி வருகிறார். அவரின் படங்களுக்கு பலவித விமர்சனங்கள் எழுந்தாலும் 40 வயதிலும் இளமை குன்றாமல் இருக்கும் ஸ்ரேயாவின் படங்களை அவரின் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.



# சாதனை வசூல்




கடந்த வாரம் வெளியான ‘பொன்னியின் செல்வன்’ திரைப்படம் உலகம் முழுவதும் 300 கோடி இந்திய ரூபாய் வசூலித்து சாதனைப் படைத்துள்ளது. வசூல் தொகையை 300 கோடி ரூபாயை கடந்து விட்டதாக படத்தை தயாரித்த லைகா நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதன்படி, உலக அளவில் முதல் நாள் வசூல் - ரூ.78.29 கோடி, இரண்டாம் நாள் - ரூ.60.16 கோடி, மூன்றாவது நாள் - ரூ.64.42 கோடி, நான்காவது நாள் - ரூ.25.37 கோடி, ஐந்தாவது நாள் - ரூ.30.21 கோடி, ஆறாவது நாள் - ரூ.29.40 கோடி, ஏழாவது நாள் - ரூ.20.74 கோடி என மொத்தம் ரூ.308.59 கோடி வசூல் செய்துள்ளது.

# விஜயுடன் அருண்விஜய்



யானை, சினம் திரைப்படத்தின் வெற்றிகளைத் தொடர்ந்து நடிகர் அருண் விஜய் நடிக்கும் திரைப்படம் அச்சம் என்பது இல்லையே.

இயக்குநர் விஜய் இயக்கும் இந்தத் திரைப்படத்தில் அருண்விஜய்க்கு ஜோடியாக எமி ஜாக்சன் நடிக்கிறார். அதிரடி திரைப்படத்திற்கு இசையமைப்பாளர் ஜி. வி. பிரகாஷ்குமார் இசையமைக்கிறார்.

# தலைவர் பிரபாகரன் வரலாறு படமாகிறது

இயக்குநர் வெற்றிமாறன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை இயக்கவுள்ளார். இந்தப் படத்தை நாம் தமிழர் கட்சியின் தலைவர் தயாரிக்கவுள்ளார். இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில்,

“தமிழர்களின் போற்றுதற்குரிய மூதாதை, அரசனுக்கரசன் அருள்மொழிச் சோழனின் உண்மையான வரலாற்றையும், இந்த நூற்றாண்டின் இணையற்ற விடுதலைப் போராளி தமிழ்த்தேசிய தலைவர் அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வரலாற்றையும் ஆகச்சிறந்த கலைவடிவமாக நான் தயாரிக்க, என் அன்புத்தம்பி வெற்றிமாறன் இயக்குவார்.”, ஆனால், வெற்றிமாறன் தரப்பிலிருந்து இது குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை.






## திரைவிமர்சனம்

**திரைப்படம் - நானே வருவேன்**
**தயாரிப்பு - வி கிரியேஷன்ஸ்**
**இயக்கம் - செல்வராகவன்**
**இசை - யுவன்ஷங்கர் ராஜா**
**நடிப்பு - தனுஷ், இந்துஜா, எல்லி அவ்ராம்**

இயக்குநர் செல்வராகவன், இசையமைப்பாளர் யுவன்ஷங்கர் ராஜா, தனுஷ் கூட்டணி நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இணைந்ததால் இந்தப் படம் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் அதிகமாகவே இருந்தது. அந்த எதிர்பார்ப்பை அவர்களின் மாறுபட்ட பாணியிலேயே மீண்டும் பூர்த்தி செய்திருக்கிறார்கள்.

இரு வேடங்களில் கதாநாயகன் நடிப்பது, அதிலும் அவர்கள் இரட்டையர்களாக இருப்பது தமிழ் சினிமாவில் இதற்கு முன் பல படங்களில் பார்த்த ஒன்று. அதை புதிய பாணியில் கொடுத்திருக்கிறார் இயக்குநர் செல்வராகவன். அவருக்குத் துணையாக இரட்டைவேடத்தில் தனுஷ், இசையில் யுவன் என இருக்கிறார்கள்.

சிறு வயது இரட்டையர்கள் கதிர், பிரபு. இவர்களில் கதிர் சைக்கோத்தனமான குணம் கொண்டவர். அவரின் குணத்தைத் தாங்க முடியாமல் அப்பா கடுமையாக கண்டிக்கிறார். அதனால், அப்பாவையே கொலை செய்கிறான் கதிர். ஒருநாள் கதிரை தனியாக விட்டு, இன்னொரு மகன் பிரபுவை மட்டும் தன்னுடன் அழைத்துச் சென்றுவிடுகிறார் அவர்களின் அம்மா. இருபது வருடங்களுக்குப் பிறகு பிரபு தன் மனைவி ஒரு மகள் என குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கிறார். இந்நிலையில் பிரபுவின் மகள் சத்யா உடம்பில் ஒரு பேய் புகுந்து கொள்கிறது. சத்யா உடம்பை விட்டு வெளியேற வேண்டுமென்றால் ஒரு கொலையைச் செய்யச் சொல்கிறது. யாரை கொல்லச் சொல்கிறது, எதற்காகக் கொல்லச் சொல்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

கதிர், பிரபு என இரண்டு வேடங்களில் தனுஷ். கதிர் சிறு வயதிலிருந்தே சைக்கோத்தனமான குணம் கொண்டவர். படத்தில் அந்தக் கதாபாத்திரம் இடைவேளைக்குப் பிறகுதான் வருகிறது. இடைவேளையில் அந்தக் கதாபாத்திரத்தின் அறிமுகத்துக்கு ரசிகர்களிடம் அப்படி ஒரு வரவேற்பு.

இரண்டாம் பாதி முழுவதும் அந்தக் கதிரின் கலக்கல்தான் இடம்பெற்றுள்ளது. எதிர்மறை கதாபாத்திரத்தில் தனுஷின் நடிப்பு ஸ்ரைலிஷாக உள்ளது. அன்பான அப்பா, கணவனாக பிரபு கதாபாத்திரம். தன் மகள் எப்படியாவது குணமடைய வேண்டும் என பொறுப்பாக நடந்து கொள்கிறார். இரண்டு கதாபாத்திரங்களுக்கும் நிறையவே வித்தியாசம் காட்டி நடித்திருக்கிறார் தனுஷ்.

படம் முழுவதும் இரண்டு தனுஷ்கள் மட்டுமே நிறைதிருப்பதால் மற்ற கதாபாத்திரங்களுக்குக் கொஞ்சம் குறைவான நேரம்தான். இருந்தாலும் அந்தக் குறைவான நேரத்திலும் தங்கள் நிறைவான நடிப்பைத் தந்துள்ளார்கள். பிரபு கதாபாத்திர தனுஷ் ஜோடியாக இந்துஜா, கதிர் கதாபாத்திர தனுஷ் ஜோடியாக எல்லி அவ்ராம். மனநல மருத்துவராக பிரபு, தனுஷின் நண்பனாக யோகி பாபு நடித்திருக்கிறார்கள்.

தனுஷின் மகள் சத்யாவாக நடித்திருக்கும் ஹியா தவே, மகன்களாக நடித்திருக்கும் பிரபவ், பிரணவ் ஆகியோரின் நடிப்பு இந்த வயதில் அவ்வளவு இயல்பாக உள்ளது.

படத்தின் பெரும் தாங்குதூண் யுவன்ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை. பல காட்சிகளில் அவரின் பின்னணி இசை படத்தை இன்னும் தூக்கி நிறுத்துகிறது. “வீர சூர தீரா” பாடல் படத்தின் ரெம்போவை அதிகப்படுத்துகிறது. “ரெண்டு ராஜா, பிஞ்சு பிஞ்சு மழை“ பாடல்களும் ரசிக்க வைக்கின்றன. ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு, புவன் சீனிவாசன் படத் தொகுப்பு கதைக்குத் தேவையான விதத்தில் சரியாக அமைந்திருக்கின்றன. இரண்டு மணி நேரப் படம் என்பது முக்கியம். தேவையற்ற காட்சிகள் எதுவும் படத்தில் இல்லை.

செல்வராகவன் கதாபாத்திரம் டக்கென வந்து போகிறது. கதிர் கதாபாத்திர தனுஷின் கொலை வெறிக்கு அவரும் ஒரு காரணம் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்திருக்க வேண்டும். இடைவேளைக்குப் பின் இரண்டு தனுஷ்களும் நிறைய மோதிக் கொள்வார்கள் என எதிர்பார்த்தால் அதில் ஏமாற்றம்.

செல்வராகவனிடமிருந்து ஒரு பேய்ப் படமா என்ற கேள்வி எழும். ஆனால், ஆரம்பத்திலேயே தலைப்பின் முன்பாக அது பற்றி ஒரு அறிமுகம் போட்டுவிடுகிறார்கள். உணர்ச்சிகரம், பேய், சைக்கோ என வேறு ஒரு “வகை“ படத்தை முயற்சித்திருக்கிறார்.




# உலகக் கிண்ணமே இறுதித் தொடர்...!

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர ஆட்டக்காரர் என போற்றப்படுபவர் லயோனல் மெஸ்ஸி. ஆர்ஜென்ரீனா நாட்டை சேர்ந்த வீரர். ஆனாலும் இவருக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். இந்நிலையில், எதிர்வரும் கட்டார் உலகக் கிண்ணத் தொடர்தான் தனது கடைசி தொடர் என அவர் தெரிவித்துள்ளார்.

35 வயதான மெஸ்ஸி, கடந்த 2005 முதல் தன் தேசிய அணிக்காக சர்வதேச களத்தில் விளையாடி வருகிறார். இதுவரை மொத்தம் 164 போட்டிகளில் விளையாடி 90 கோல்களை பதிவு செய்துள்ளார். இது ஆர்ஜென்ரீனா அணிக்காக மட்டும் அவர் பதிவு செய்துள்ள கோல்கள்.

இது தவிர, தன் அணியின் வீரர்கள் பல கோல்களை அடிக்க உதவிய சம்பவங்களிலும் அவருக்கு பங்குண்டு. இதுவரை நான்கு உலகக் கிண்ணத் தொடரில் அவர் பங்கேற்று விளையாடி உள்ளார். கட்டார் உலகக் கிண்ணத் தொடர் அவர் பங்கேற்கும் ஐந்தாவது தொடராகும்.

“நிச்சயம் இது எனது கடைசி உலகக் கிண்ணத் தொடர். இந்த தொடர் தொடங்கவுள்ள நாட்களை நான் கணக்கிட்டு வருகிறேன். கொஞ்சம் பதற்றமாக உள்ளது. என்ன நடக்க போகிறது? எனது கடைசி தொடர் எப்படி அமைய உள்ளது? என்னால் அந்த தருணத்துக்காகக் காத்திருக்க முடியவில்லை. அதே நேரத்தில் அது சிறப்பானதாக அமைய வேண்டும்.

உலகக் கிண்ணத் தொடரில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஒவ்வொரு போட்டியும் கடினமானது. எப்போதும் பிடித்த அணிகள் வெல்வது கடினம். ஆர்ஜென்ரீனா அனைவருக்கும் பிடித்த அணியா என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால், எங்கள் அணியின் வரலாறு அந்த பட்டியலில் உள்ளது. எங்களை விட சிறந்த அணிகள் இந்த தொடரில் உள்ளன” என மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

தற்போது காயம் காரணமாக அவர் பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்கான போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். கட்டார் நாட்டில் உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் வரும் நவம்பர் 20ஆம் திகதி தொடங்கவுள்ளது. ஆர்ஜென்ரீனா குழு ‘சி’-யில் இடம்பெற்றுள்ளது.

# டெஸ்ட் கதவை மூடும் நேரம்




டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு மீண்டும் திரும்ப மாட்டேன் எனப் பிரபல இங்கிலாந்து வீரர் மொயின் அலி கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் சகலதுறை வீரர் மொயின் அலி, டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாகக் கடந்த வருட செப்ரெம்பர் மாதம் அறிவித்தார்.

இங்கிலாந்து அணிக்காக 64 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார் மொயின் அலி. டெஸ்ட் கிரிக்கெட்டில் 2914 ரன்களும் 195 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் தனது முடிவை மாற்றிக்கொண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் மீண்டும் விளையாட விருப்பம் தெரிவித்தார். ஒரு பேட்டியில் அவர் கூறியதாவது:

இங்கிலாந்து டெஸ்ட் பயிற்சியாளர் மெக்கலம் எப்போது என்னை அழைத்தாலும் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நான் விளையாடத் தயார். பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த நான் இங்கிலாந்து அணியினருடன் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடுவது அற்புதமானது. பல வருடங்களுக்குப் பிறகு இங்கிலாந்து அணி பாகிஸ்தானுக்கு விளையாடச் செல்வதால் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு தொடராக அது அமையும். மெக்கலமிடம் நான் பேசினேன். பாகிஸ்தான் தொடர் பற்றி இருவரும் விவாதித்தோம். கதவு எப்போதும் திறந்திருக்கிறது. இதனால் நான் ஓய்வு பெறும் முடிவைத் திரும்பப் பெற்றதாக எண்ணிக் கொள்ளலாம் - என்றார்.

இந்நிலையில், அவர் தனது முடிவை மீண்டும் மாற்றியுள்ளார். டெய்லி மெயில் பத்திரிகையில் அவர் எழுதிய கட்டு ரையில்,

பாகிஸ்தானில் விளையாடவுள்ள டெஸ்ட் தொடரில் நான் பங்கு பெற மாட்டேன். வருத்தமாக உள்ளது. இனி மேலும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட எனக்கு ஆர்வமில்லை. பாகிஸ்தான் சுற்றுப்பயணம் பற்றி மெக்கலத்திடம் மனம் திறந்து பேசினேன். மீண்டும் ஹோட்டலில் ஒரு மாதம் தங்கி என் முழுத் திறமையை வெளிப்படுத்தி விளையாட முடியும் என எனக்குத் தோன்றவில்லை.

டெஸ்டில் என் பங்களிப்பு முடிந்தது எனத் தோன்றுகிறது. டெஸ்ட் கிரிக்கெட் கடுமையானது. பாகிஸ்தானில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் என் மனநிலை மாறும் எனத் தெரியவில்லை. என் பக்கமிருந்து டெஸ்ட் கிரிக்கெட்டுக்கான கதவை மூடும் நேரம் இது - என்றார்.

# இதுவும் எதிர்ப்பே...!




இவ்வருடம் கட்டாரில் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் டென்மார்க் அணி வீரர்கள் தமது மனைவி, காதலியை தம்முடன் கட்டாருக்கு அழைத்துச் செல்வதற்கு டென்மார்க் அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

கட்டாரின் மனித உரிமைகள் நிலைவரத்துக்கு தமது எதிர்ப்பை வெளியிடும் வகையில், இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் உலகப் பிரசித்தி பெற்றவர்களாக விளங்கும் நிலையில் அவர்களின் மனைவிமார், காதலிகளும் பிரபலமாக விளங்குகின்றனர். அப்பெண்கள் குறித்த தகவல்களை அறிந்துகொள்வதற்கு மக்கள் ஆர்வம் செலுத்துகின்றனர்.

சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளின் போது வீரர்களுடன் அவர்களின் துணைவியர்களும் செல்வது வழக்கம்.

இவ்வருட உலகக் கிண்ண சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ள பல நாடுகள் தமது வீரர்களுடன் அவர்களின் குடும்பங்களும் கட்டார் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளன. எனினும், டென்மார்க் வீரர்கள் தம்முடன் தமது குடும்பத்தினரை அழைத்துச் செல்வதை டென்மார்க் உதைபந்தாட்டச் சங்கம் தடை செய்துள்ளது.

கட்டாரின் மனித உரிமைகள் நிலைவரத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில், அந்நாட்டில் டென்மார்க்கியர்களின் செயல்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ள டென்மார்க் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

கட்டாரில் பணியாற்றிய தெற்காசிய தொழிலாளர்களில், 2010 ஆம் ஆண்டின்பின் 6500 பேர் உயிரிழந்தனர் என பிரிட்டனின் கார்டியன் பத்திரிகை ஆய்வு ஒன்று 2021 பெப்ரவரியில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், இதனை கட்டார் மறுத்துள்ளது.




# சதாபிஷேகம் காணும் இராமநாத ஸ்ரீதரக்குருக்கள்

**இணுவை ச. சிறி ரங்கன்**

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஆலயங்கள்தோறும் சைவ சமயத்தைச்சிதைவுறாது காப்பாற்றி வளர்த்த பெருமை சிவாச்சாரியர்களைச் சாருகின்றது. இவ்வகையில், சைவசமயத்தையும், தமிழையும் இணுவில் கிராமத்தில் சீரும், சிறப்புமாக வளர்ந்தோங்கச்செய்த அந்தணப் பெருமக்களின் வழிவந்தோருள் முதன்மையான ஒருவரான இராமநாதக்குருக்களின் புதல்வர் சிவஸ்ரீ இராமநாத சிவாச்சாரியார் ஸ்ரீதரக்குருக்கள்.

ஆரம்பத்தில் தனது தகப்பனாரையே குருவாகக் கொண்டு, தனது குருத்துவப்படிப்பை மேற்கொண்டு, ஆகமக் கிரியை முறைகளை ஐயந்திரிபற இவர் கற்றுக்கொண்டார்.

பின்னர், தனது கிராமத்திலிருந்து, நாரந்தனையிலுள்ள தான்தோன்றி அம்மன் ஆலயத்திற்குத் தன் தந்தையுடன் சென்று, பூசகராகக் கடமையாற்றினார். காலச் சுழற்சியில் இவரின் திறமையைக்கண்ட நாரந்தனை மக்கள் இவரையே தான்தோன்றி அம்மன் ஆலயக்குருவாக ஏற்று, நிரந்தரமான அர்ச்சகராக வேண்டுதல் விடுத்தனர். தனது இளமைக்காலம் தொட்டு, சுமார் முப்பது வருடங்கள்வரை இவர் அங்கேயே பணி செய்தார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலையடுத்து, அங்கிருந்து கொழும்புக்கு குடிபெயர்ந்தார்.

தலைநகர் கொழும்பில் இருந்த இவரை, லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயம் தேர்ந்தெடுத்து, சேவைக்கு அமர்த்தியது. இங்கு இவரின் கனிவான வார்த்தைகளும், மந்திர உச்சாடனங்களும் அடியார்களைக் காந்தம்போல் கவ்விக்கொண்டன வெனில் அது மிகவும் உண்மையானதே. மிக இளவயதில் தேவார, திருவாசகங்களையும், பண்ணிசையை யும் கசடறக்கற்றுத் தேர்ந்தமை இவரின் வளர்ச்சியை மேலும் அதிகரித்தன. இவர் பெற்ற சங்கீத அறிவால் மிகச் சுவையாகப்பாடும் திறமையையும் இவர் வளர்த்துக்கொண்டார்.

இருவருட கால சேவையை லண்டனில் பூர்த்தி செய்து, இவர் ஓய்வுபெற எத்தனித்தபோது, இவரது சேவை ஒல்லாந்து நாட்டில் வாழ்ந்த மக்களுக்கு தேவைப்பட்டது. அந்நாட்டிலுள்ள 'டென் கில்லர்' என்ற நகரத்தில் நிறுவப்பட்ட விநாயகர் ஆலயத்திற்கு இவரைப் பிரதான பூசகராகத் தேர்ந்தெடுத்தனர்.

> "இருவருட கால சேவையை லண்டனில் பூர்த்தி செய்து, இவர் ஓய்வுபெற எத்தனித்தபோது, இவரது சேவை ஒல்லாந்து நாட்டில் வாழ்ந்த மக்களுக்கு தேவைப்பட்டது. அந்நாட்டிலுள்ள 'டென் கில்லர்' என்ற நகரத்தில் நிறுவப்பட்ட விநாயகர் ஆலயத்திற்கு இவரைப் பிரதான பூசகராகத் தேர்ந்தெடுத்தனர்.

அங்கே அந்த ஆலயத்தின் குடமுழுக்கையும் நிறைவேற்றும் பாக்கியம் இவருக்கே கிட்டியது.

மேற்குறிப்பிட்ட ஆலயங்களில் மட்டுமன்றி, கனடாவிலுள்ள சில ஆலயங்களுக்கும் இவர் அழைக்கப்பட்டபோது சென்று, " என் கடன் பணி செய்துகிடப்பதே" என்ற பாசுர வாக்கையும் நிறைவேற்றியிருக்கின்றார்.

லண்டன் வோல்த்தம்ஸ்ரோவில் அருள் பாலிக்கும் கற்பக விநாயகர் ஆலயப்பிரதம குருவும், அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அருள்தரும் முருகன் ஆலய பிரதமகுருவும் தாய்மாமனாகிய இவரின் பெருமையை மேலும் பிரகாசிக்கச் செய்து வருகின்றனர். ஆயிரம் பிறைகண்ட இப்பெருமகனாரின் சதாபிஷேகம், இன்று வெள்ளிக்கிழமை இணுவில் கந்தசாமி கோவிலில் அடியார்களாலும், சிவாச்சாரியார்களாலும் ஒருங்குதிரண்டு கொண்டாடப்படுகிறது.

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**கே. சிவதாஸ், நெல்லியடி, வடமராட்சி.**

**கேள்வி:**
சட்டவிரோதமான மீன்பிடிக்கு அதிகாரிகள் துணை போவதாகக்கூறி முல்லைத்தீவில் மீனவர்கள் போராட்டம் நடாத்தியபோது பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ததாக செய்திகள் வெளிவந்திருந்தனவே. அப்போ போராட்டமே செய்யவேண்டாம் என்கின்றார்களா?

**வியுக்தியார்:**
சட்டவிரோதமான மீன்பிடிக்கு அதிகாரிகள் துணை போவதாக மீனவர்கள் போராட்டம் நடாத்தியபோது, சட்டவிரோதமான மீன்பிடிக்கு ஆதரவானவர்கள் இன்னுமொரு போராட்டத்தை நடாத்தியபோது இருதரப்பிற்குமிடையே மோதல் ஏற்பட்டதால்தான் அவ்வாறு கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. ஒரு சட்டவிரோதமான செயலை செய்வதற்கு ஆதரவாக போராட்டம் நடாத்தக்கூடிய ஒரேயொரு நாடு உலகத்தில் இருக்கின்றது என்றால் அது நமது நாடுதான் போலும்.

**க. பாஸ்கரன், வட்டக்கச்சி, கிளிநொச்சி.**

**கேள்வி:**
பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டால் மாத்திரம்போதாது இலங்கை மீண்டெழ வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாணவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அம்மையார் கூறியிருக்கிறரே. அவர் ஜனாதிபதியாக இருந்த போதே இனப்பிரச்சினைக்கு தீர்வைக்கண்டிருக்கலாமே?

**வியுக்தியார்:**
இலங்கையின் வரலாற்றிலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வாக இதுவரை முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனை களிலேயே அவரது ஆட்சிக்காலத்தில் அவரால் முன் வைக்கப்பட்ட தீர்வு யோசனைதான் சிறப்பானது என்று எல்லோருமே ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் அந்த தீர்வு யோசனையை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து பாராளுமன்றத்தில் எதிர்த்தவர்கள் தமது கூட்டமைப்பினர் தானே. இன்று அந்த தீர்வு யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் நாடு எத்தனையோ விடயங்களில் முன்னோக்கி சென்றிருக்கும். பாவம் அவர் என்ன செய்வது? இப்போது அவர் சொல்வதை கேட்பதற்கும் யாரும் இல்லாதபோது அவர் இவ்வாறு சொல்வதாலும் நமக்கு எதுவும் கிடைத்திடாது பாஸ்கரன்.

**எஸ்.சுதர்மன், நாவற்குழி, கைதடி.**

**கேள்வி:**
ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கை மீதான புதிய பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது அரசுக்குச் சவாலாக அமையாது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித் திருந்தார். ஆனால் அந்த தீர்மானத்தால் நாட்டுக்கு பாரிய ஆபத்து என்று எதிர்க் கட்சிகள் கூறுகின்றனவே?

**வியுக்தியார்:**
அவர் சொல்வது இந்த அரசுக்கு சவால் இல்லை என்பது. ஆனால் அந்த தீர்மானம் ஏற்கனவே இரண்டு ஆண்டுகள் அரசுக்கு கால அவகாசம் வழங்கியிருக்கின்ற தல்லவா. அப்படியெனில் அந்த கால அவகாசம் முடிந்தபின்னர் ஆட்சியில் இருப்பவர் களுக்குத் தானே அது சவாலான விடயம். அதைத் தான் அவர் இந்த அரசுக்கு சவாலாக அமையாது என்கின்றார். இரண்டு வருடத்திற்கு பின்னர் இந்த அரசாங்கம் இருக்காது என்பதைத்தான் அவர் அப்படி செல்கிறார் என்று நினைக்கின்றேன். நாட்டுக்கு பாரிய ஆபத்து என்று சொல்கின்ற எதிர்க்கட்சிகள் தாம் அப்போது பதவிக்கு வந்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் அப்படிச் சொல்கிறார்கள். அவ்வளவு தான்.

**போல் கென்னடி, அடம்பன், மன்னார்.**

**கேள்வி:**
ஜெனிவாவில் இலங்கை இன்று கூனிக்குறுகி நிற்க ராஜபக்ஷக்களே முழுக்காரணம் என்று பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி, சுயாதீனமாகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:**
ஒமோம் நானும் படித்தேன். தாங்கள் இன்று மக்கள் மத்தியில் கூனிக்குறுகி நிற்பதற்கு தங்களோடு இருந்த வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள்தான் காரணம் என்றுதான் ராஜபக்சக்களும் கூறிக்கொண்டிருக்கின்றார்களாம். திருமணமாகி பல வருடங்கள் வாழ்ந்த பின்னர் மனைவியை விவாகரத்துச் செய்யும் போது, கணவர்கள் மனைவி மீது புகார் சொல்வது போலத்தான் இதுவும்.

# சரஸ்வதியும் சங்கரலிங்கமும்

முருகபூபதி

“ வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்
வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. “

சங்கரலிங்கம், சகல கலா வல்லி மாலையை மெய்யுருக பாடிக்கொண்டிருந்தார். சங்கரலிங்கத்திற்கு எழுபத்தியைந்து வயதும் கடந்து, அவுஸ்திரேலியாவுக்கு வந்து நாற்பது வருடங்களும் ஓடிவிட்டன. ஐந்து வயதில் பாடசாலையில் சொல்லித்தந்த சகலகலா வல்லி மாலை அவரைவிட்டு ஓடிவிடவில்லை.

வந்த காலம்முதல் நவராத்திரிக்கு மட்டுமல்ல, நல்லூரில் கொடியேறினாலும் சிவன்ராத்திரி காலம் வந்தாலும், ஊரில் சித்திவிநாயகருக்கு சதூர்த்தி தொடங்கினாலும், சங்கரலிங்கம் விரதம் அனுட்டிப்பவர்.

இலங்கையில் ரயில்வே திணைக்களத்தில் பணியாற்றிய காலத்திலும் நவராத்திரியின் போது, அவர்தான் அலுவலகத்தில் கலைமகள் விழாவை ஏற்பாடு செய்வார். ஒரு தடவை போக்குவரத்து அமைச்சரையும் அழைத்தார். அவர் பௌத்த சிங்களவர். பிள்ளையாரை கணதெய்யோ எனவும், சிவனை ஈஸ்வர தெய்யோ எனவும், முருகனை கதரகம தெய்யோ எனவும் சரஸ்வதியை அதே பெயரில் சரஸ்வதி தெய்யோ எனவும் அழைக்கத்தெரிந்த அமைச்சர்.

அவுஸ்திரேலியாவுக்கு வந்தபின்னர், இங்கே தேடிக்கொண்ட நண்பர்களிடமும், தான் அமைச்சரை கலைமகள் விழாவுக்கு அழைத்த கதையை விஸ்தாரமாக எடுத்துச்சொல்லிவிடுவார்.

அவரது மனைவி சுகுணா வழக்கம்போல் இம்முறையும் கடலை, அவல், சக்கரைப்பொங்கல், வடை, மோதகம் தயார் செய்து சரஸ்வதி, துர்க்கை, லெட்சுமி, பிள்ளையார், சிவன், பார்வதி, முருகன் வள்ளி தெய்வானை காட்சிதரும் படங்களுக்கு முன்னால் வெள்ளித்தட்டுக்களில் பரப்பி வைத்திருந்தாள். நவராத்திரி தொடங்கும் முன்பே கொலு பொம்மைகளையும் வரிசையாக அடுக்கி தயார் செய்திருந்தாள்.

வாழை, மா, அப்பிள், திராட்சை, தோடை முதலான ஐவகை பழங்களும் படைக்கப்பட்டன. சிங்கப்பூரில் வாங்கிவந்த பச்சை நிற பிளாஸ்ரிக் வாலை இலைத்தட்டில் பொங்கலை வைத்தாள்.

சங்கரலிங்கம் சகலகலா வல்லிமாலையை மனம் உருகிப் பாடிக்கொண்டிருந்தார்.

“கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.” என்ற இறுதி வரிகளை அவர் பாடிக்கொண்டிருந்தபோது, வாசல் கதவு தட்டும் சத்தம் கேட்டது.



“ சுகுணா போய்ப்பாரும்... யார்...இந்த நேரத்தில்...? “

“ என்னால் முடியாது. நீங்க போய்ப் பாருங்க... ” ‘சிலந்தி, கரப்பொத்தானை கண்டுவிட்டாலும் கத்தி ஊரைக்கூட்டுபவள், எப்படி இரவுவேளையில் எதிர்பாராமல் வரும் ஓசை கேட்டு கதவு திறப்பாள்...? நான் இல்லாத காலத்தில் என்னதான் செய்வாளோ..? ஈஸ்வரா.... ‘ சங்கரலிங்கம் மனதில் குமைந்துகொண்டு, கதவருகில் சென்று உட்புறமாக நின்றுவாறு, முதலில் Who ...? என்றும் பின்னர் யார்..? என்றும் கேட்டார்.

“ நான்தான் சரஸ்வதி வந்திருக்கிறேன். கதவைத்திற சங்கரலிங்கம் “ குரல் கதவுக்கு அப்பால் எதிர்ப்புறமிருந்து அசரீரிபோன்று கேட்டது.

“ யாரப்பா... இந்த நேரத்தில்.... “ மனைவி தயங்கியவாறு பின்னால் வந்து நின்றாள்.

“ யாரோ... சரஸ்வதியாம்... அந்தப்பெயரில் உமக்கு யாரையாவது தெரியுமா..?”

மீண்டும் கதவு தட்டப்பட்டது.

சங்கரலிங்கமும் மீண்டும், “ Who ...? யார்...? ” என்று சொல்லிப் பார்த்துவிட்டார்.

“ ஏன்... வேறும் மொழிகள் தெரிந்தால் கேட்டுப் பார்க்கவேண்டியதுதானே..? பல்லின கலாசார நாட்டில் பல மொழிகளும் பேசுகிறார்கள்தானே...? உனக்கு எத்தனை மொழி தெரியும்... ? அதுபற்றி பிறகு பேசுவோம். முதலில் கதவைத்திற..... நான்தான் நீ வணங்கும் சரஸ்வதி வந்திருக்கிறேன். ”

“ ஏனப்பா... ட்றிபிள் ஸீரோவுக்கு போன் பண்ணி பொலிஸை கூப்பிடுவோமா..? “ என்று நடுக்கத்துடன் கேட்டாள் சுகுணா.

சங்கரலிங்கம் தயக்கத்துடன் கதவைத்திறந்தார். சுகுணா பயத்துடன் பின்வாங்கி, வீட்டின் சுவாமி அறைக்கதவு நிலையை பிடித்துக்கொண்டாள்.



“ ஈஸ்வரா... ” என்று முணுமுணுத்தவாறு சங்கரலிங்கம் கதவைத்திறந்தார். அவரது முகத்தை நோக்கி வெளிச்சம் பாய்ந்தது. ஒரு பெண் கண்கள் மின்ன அவரை விலத்தியவாறு உள்ளே வந்தாள். அந்த முகத்தில் பிரகாசம்.

“ நான்தான் சரஸ்வதி. என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா..? நீ தினமும் வணங்கும் படத்திலிருப்பவள் போன்ற தோற்றத்திலிருக்கின்றேனா... சொல்... இல்லையென்றால், அந்தத் தோற்றத்திலே வந்தால்தான் நம்புவாயா....? சங்கரலிங்கம்.... சொல்...”

சரஸ்வதி , நான்கு அறைகள் கொண்ட அந்த பெரிய வீட்டை சுற்றிப்பார்த்தாள்.

“ நான் காண்பது கனவா... நனவா..? சொல்லுங்கள் தாயே....” சங்கரலிங்கம் நடு நடுங்கியவாறு பிதற்றினார்.

“ நீதான் இவரது மனைவியா...? நீயும் என்னைப் போல ஒருத்தி... எதற்காக பயப்படுகிறாய். நீதானே இந்த ஆளுக்காக மூன்று பிள்ளைகளை சுமந்து பெற்றுக் கொடுத்து வளர்த்து ஆளாக்கி, உரிய காலத்தில் அவர்களை கரைசேர்த்துவிட்டவள். இன்னமும் உனக்கு ஓய்வில்லை. “ எனச் சுகுணாவைப்பார்த்து சொல்லிக் கொண்டே சரஸ்வதி அந்த சுவாமி அறைக்குள் பிரவேசித்தாள். கொலுவுக்கு முன்பாக படைக்கப்பட்ட உணவுப் பதார்த்தங்களுடன் ஐவகைக்கனிகளும் மலர்களும் அறைக்கு மேலும் மெருகூட்டின.

“ இத்தனை உணவுகளையும் நீதானே சமைத்தாய்...?” சரஸ்வதி , சுகுணாவின் பக்கம் திரும்பிக்கேட்டாள்.

அதற்கு அவள் நடுங்கியவாறு தலையசைத்தாள்.

வடை, கடலை, மோதகம், அவல், பொங்கல்... இவ்வளவும் நீ செய்து முடிக்கும் வரையில் உன் கணவன்... இந்த சங்கரலிங்கம் என்ன செய்து கொண்டிருந்தார்...? நீ... சொல்ல வேண்டாம்.. எனக்குத் தெரியும். முகநூலில் நோண்டிக்கொண்டிருந்திருப்பார். “ என்று சொன்ன சரஸ்வதியிடம்,” இல்லை தாயே... இன்று முழுவதும் நான் முகநூலில் உங்கள் படத்தைப்போட்டு, சரஸ்வதி தோத்திரப்பாடல்களையும் பதிவேற்றிக்கொண்டிருந்தேன் தாயே...” என்றார் சங்கரலிங்கம்.

“அம்மா... வந்தது முதல் நின்றுகொண்டே பேசுகிறீர்கள். இங்கே எங்கள் வீட்டில் சரஸ்வதி பூசை நாளன்றே நேரில் வந்து காட்சி தந்துள்ளீர்கள். நாம் அதற்கு என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை தாயே... எம்மை முதலில் ஆசிர்வாதியுங்கள். அதன் பிறகு நீங்களும் நான் இன்று படையலுக்கு செய்த உணவுப்பதார்த்தங்களை சாப்பிட வேண்டும்” எனச்சொல்லிக்கொண்டே சுகுணா, சரஸ்திவதியின் காலடியில் மண்டியிட்டு அமர்ந்து பாதங்களை தொட்டு வணங்கினாள். சங்கரலிங்கமும் சரஸ்வதியின் பாதங்களை பணிந்து வணங்கினார். ஆனால், தீண்டவில்லை.

சுகுணா ஒரு வெள்ளித்தட்டத்தில் படைக்கப்பட்ட பதார்த்தங்களை பக்குவமாக எடுத்துவைத்து பரிமாறி சரஸ்வதியிடம் நீட்டினாள்.

“ வடையில் எண்ணெய்... கடலையிலும் எண்ணெய்... அவல், பொங்கல், மோதகத்தில் இனிப்பு... இவ்வளவும் சங்கரலிங்கத்திற்கு ஆகாது அல்லவா..? உங்கள் இரண்டுபேருக்காக ஏன் இவ்வளவு செய்திருக்கிறாய் சுகுணா..?”

“ மிஞ்சினால்... எங்கள் குளிர்சாதனப்பெட்டியில் வைத்திருந்து நாளையும் சாப்பிடலாம் தாயே...”

“ இதனைத்தானே இந்த புகலிடத்தில் எல்லா வீடுகளிலும் செய்து வருகிறீர்கள். பழுதடைந்துவிட்டால் கழிவுகளுடன் கொட்டி விடுவீர்கள். இவ்வாறு இங்கே எத்தனை வீடுகளில் தேவைக்கு அதிகமாக சமைத்து சாப்பிடாமல் வெளியே கொட்டுகிறார்கள் தெரியுமா...? சங்கரலிங்கம் இன்று நான் இந்த சரஸ்வதி பூசை நாளில் உன்னைப்பார்க்க ஏன் வந்திருக்கின்றேன் தெரியுமா..? ”

“ இல்லை தாயே...! நீங்கள் இப்படி வந்து காட்சி கொடுத்த அதிர்ச்சியிலிருந்தே இன்னமும் நாமிருவரும் மீளவில்லை. சொல்லுங்கள் தாயே..” சங்கரலிங்கம் குனிந்து வணங்கி கேட்டார்.

“ உன்னிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும்”

“ கேளுங்கள் தாயே... என்ன கேட்கப் போகிறீர்கள்..?” சங்கரலிங்கம் தயங்கினார்.

“ நீ எத்தனை வருட காலமாக இப்படி எனக்காக சரஸ்வதி பூசையும் நடத்தி சகல கலா வல்லிமாலையும் பாடுகிறாய்...?”

“ அம்மா... தாயே.. நான் ஊரில் ஆரம்ப வகுப்பு படிக்கும் காலத்திலிருந்து மட்டுமல்ல, பல்கலைக் கழகம் சென்றும் பாடியிருக்கின்றேன். அது மட்டுமில்லை தாயே. நான் இலங்கையில் ரயில்வே திணைக் களத்தில் பணியாற்றும்போதும் சரஸ்வதி பூசை காலத்தில் எங்கள் அலுவலகத்திற்கு அமைச்சர்களையெல்லாம் அழைத்து சிறப்பாக கலைமகள் விழாவை நடத்தியிருக்கின்றேன். அதுமட்டுமல்ல உங்களுக்குத் தெரியும்தானே, ஏ.பி. நாகராஜன் என்ற சினிமா இயக்குநர் . அவர் பல புராணப்படங்கள் எடுத்தவர். அவரது சரஸ்வதி சபதம் கொழும்பில் வெளியானபோது, நானே பல சிங்கள ஊழியர்களை அழைத்துச்சென்று டிக்கட் வாங்கிக்கொடுத்து அந்தப்படத்தை பார்க்க வைத்துள்ளேன். நானும் சுகுணாவும் அதனை பலமுறை பார்த்துள்ளோம். ஆனாலும் ஒரு கவலை இருக்கிறது தாயே...”

“ என்ன சொல்லு...? ”

“ அந்தப்படத்தில் சரஸ்வதியாக நடித்த நடிகையர் திலகம் சாவித்திரி, பின்னாளில் மதுவுக்கு அடிமையாகி குடித்துக்குடித்தே செத்துப்போனாள்.. அவளைப்பற்றியும் ஒரு படம் வந்திருக்கிறது.” என்றார் சங்கரலிங்கம்.

“ அவளை விடு. அவள் நடிகை. நடிகைகள் எல்லாம் சரஸ்வதி ஆக முடியுமா..? எனக்கு எத்தனை பெயர் தெரியும்தானே... சொல்” சரஸ்வதி , சங்கரலிங்கத்தை ஏறிட்டுப்பார்த்துக்கேட்டாள்.

“ சரஸ்வதி, வாணி, கலைமகள், நாமகள், ஹம்சவாகினி, ஜகநி, புத்திதாத்ரி, வாணீஸ்வரி, வரதாயினி... மேலும் இருக்கின்றன. ஆனால், இப்போது நினைவுக்கு வரவில்லை.

“ பாரதி என்றும் ஒரு பெயர் இருக்கிறது. தெரியுமா..? ” “ ஆம்... அந்தப்பெயரில் ஒரு பெரிய கவிஞர் இருக்கிறார். மகாகவி பாரதியார்.”

“ ஆம். அதெல்லாம் உனக்குத் தெரிகிறது... ஆனால், அவர் சொன்னதுதான் உனக்குத் தெரியவில்லை. . ” அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல் , அன்னவாயினும் புண்ணியங்கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் “ என்றும் அவர் எழுதிவைத்துவிட்டு போய்விட்டார். நீ தல யாத்திரைக்கு எவ்வளவு செலவு செய்திருப்பாய். வருடாந்தம் கோயில் உற்சவங்களுக்கு எவ்வளவு பணம் அனுப்பியிருப்பாய். ஏன்... இன்றைக்குக் கூட உங்கள் இரண்டு பேருக்காக இவ்வளவு உணவுப் பதார்த்தங்கள் படைத்து, மிஞ்சுவதை குளிர்சாதனப்பெட்டியில் வைத்து இரண்டு நாட்களில் வீசப்போகிறீர்கள். இந்தப்பணத்தையெல்லாம் உனது பூர்வீக ஊரில் தாய், தகப்பன் இல்லாத ஒரு ஏழைப்பிள்ளையின் கல்விக்கு கொடுத்து உதவியிருக்கலாம்தானே..? ” எனக்கேட்டாள் சரஸ்வதி.

“ தாயே... நான் சரஸ்வதி பூசை காலத்தில் எல்லாம் கவிதைகள் எழுதி பத்திரிகைகள், முகநூலில் எல்லாம் வெளியிட்டு வருகிறேன். அவ்வாறு செய்தாலும் புண்ணியம் கிடைக்காதா..? ” - சங்கரலிங்கம் எழுந்து சென்று ஒரு பெரிய கொப்பியை எடுத்துவந்து காண்பித்தார். அதில் சில பக்கங்களில் அவர் எழுதிய கலைமகள் பற்றிய கவிதைகள் வெளிவந்த பத்திரிகைகளின் நறுக்குகள் ஒட்டப்பட்டிருந்தன. சில மஞ்சள் நிறமாக மங்கியும் இருந்தன.



சில கவிதைகளின் வரிகள் மீண்டும் மீண்டும் வெவ்வேறு காலப்பகுதியில் எழுதப்பட்டிருந்தன. சங்கரலிங்கத்தின் கற்பனை வரட்சியையும் சரஸ்வதி இனம் கண்டாள்.

சாத்தியிருந்த கதவின் ஊடாகவே சரஸ்வதி வெளியேறிச் சென்றாள்.

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

# தலிபான்களால் தொடரப்படும் இனப்படுகொலை!

## ஆப்கானிஸ்தானில் அழிக்கப்படும் "ஹசாரா" இன மக்கள் :




ஆப்கானிஸ்தான் இனரீதியாக வேறுபட்ட தேசமாகும், இதில் பஷ்டூன் பெரும்பான்மையாகவும், ஹசாரஸ், உஸ்பெக்ஸ், தாஜிக் மற்றும் பலுச் சிறுபான்மை இனமாக உள்ளனர்.

ஹசாரா இனமக்கள் நீண்ட காலமாக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் நீண்ட கால இனப்படுகொலைக்கும், கொடிய துன்புறுத்தலுக்கும் உட்பட்டுள்ளனர்.

தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ள சிறுபான்மை சமூகத்தினரான ஹசாரார்கள் பெரும்பாலும் மத்திய ஆப்கானிஸ்தானில் வாழ்கின்றனர். கடந்த காலங்களில் தலிபான்களால் அதிகமான சித்திரவதைகளையும், இன அழிப்பையும் எதிர்கொண்டவர்கள் இந்த ஹசாரா மக்கள்.

ஐக்கிய நாடுகள் சபை 2018 வெளியிட்ட ஓர் அறிக்கையின்படி, ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய பெரும்பான்மையான தாக்குதல்கள், சிறுபான்மை மக்களை குறிவைத்தே நடத்தப்பட்டுள்ளன.

மத அடிப்படையில், பெரும்பாலான ஹசாரா ஷியா முஸ்லீம் விசுவாசத்தின் உறுப்பினர்கள், குறிப்பாக சிறுபான்மை பிரிவினரின் உறுப்பினர்கள். 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பெர்சியாவிலுள்ள சஃபாவி வம்சத்தின் காலத்தில் ஹசாரா ஷியைசத்திற்கு மாற்றப்பட்டதாக வரலாற்றை அறிஞர்கள் கருதுகின்றனர். துரதிருஷ்டவசமாக, பெரும்பாலான ஆப்கானியர்கள் சுன்னி முஸ்லீம்கள் என்பதால், ஹசாரா பல நூற்றாண்டுகளாக துன்புறுத்தப்பட்டு, பாகுபாடு காட்டப்பட்டு வருகிறது. தலிபான் மற்றும் அல்-கொய்தாவால் நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு ஹசாரா இன மக்கள் பலர் பலியாகி உள்ளனர்.

அதிலும் குறிப்பாக ஹசாரா இன மக்களே அதிகமாக தாக்குதலுக்குள்ளாகி இருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. ஆப்கன் நாட்டில் மீண்டும் தலிபான்கள் 2021 ஆகஸ்ட்டில் ஆட்சிக்கு வந்த நிலையில், கடந்த சில மாதத்தில் மட்டும் ஹசாரா இனத்தைச் சேர்ந்த பலர் கொலை செய்தது தலிபான்கள் என்கிறது மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச்சபையின் சமீபத்திய அறிக்கை.

**ஹசாரார்கள் பூர்வீகம்:**

ஆப்கானிஸ்தானை 13-ஆம் நூற்றாண்டில் ஆண்ட மங்கோலிய சாம்ராஜ்ஜியத்தை செங்கிஸ் கான் மற்றும் அவரின் ராணுவ படையின் வழி வந்த சந்ததியினரே இந்த ஹசாரா இன மக்கள். மத்திய ஆப்கானிஸ்தானின் மலைப்பகுதியான "ஹஜாரிஸ்தான்" பகுதியில் வாழும் இந்த இன மக்கள் ஆப்கானிஸ்தானின் சிறுபான்மை இனத்தவர் ஆவார்கள்.

தற்போதைய ஆப்கானிஸ்தானின் ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 12 சதவீத அளவே இவர்கள் உள்ளனர். முன்பு, பெரிய எண்ணிக்கையில் இருந்த இவர்கள் பல்வேறு அடக்குமுறைகளால் ஒடுக்கப்பட்டு, இந்த நிலைக்கு வந்துள்ளனர். இன்று ஆப்கானிஸ்தானில் கிட்டத்தட்ட 3 மில்லியன் ஹசாராக்கள் உள்ளனர். அங்கு அவர்கள் பஷ்டூன் மற்றும் தாஜிகளுக்குப் பிறகு மூன்றாவது இனமாக அமைந்துள்ளனர். பாகிஸ்தானில் கிட்டத்தட்ட 1.5 மில்லியன் ஹசாராவும், பெரும்பாலும் குவெட்டா, பலூசிஸ்தான், அத்துடன் 135,000 ஐயும் ஈரானில் சுற்றி வாழ்கின்றனர். பாரசீக மொழியான ஹசராகி என்ற டாரியின் பேச்சு வழக்கில் பேசுவதால் ஹசராக்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு தெரிகிறார்கள்.

**ஹசாரக்கள் மீதான வரலாற்று படுகொலை:**

1880 வருடத்தில் இருந்தே இவர்கள் துன்புறுத்தலை எதிர் கொண்டு வருகிறார்கள். இந்த காலகட்டங்களில் ஹசராக்கள் அதிகம் வாழ்ந்து வந்த மத்திய ஆப்கானிஸ்தான் பகுதிக்கு பஷ்துன் அரசர் அமீர் அப்துல் ரஹ்மான் படையெடுத்து, கண்ணில் கண்ட ஷியா பிரிவு இஸ்லாமியர்களை கொன்று அழிக்க தனது படைக்கு உத்தரவிட்டார்.

அமீர் அப்துல் ரஹ்மான் படையெடுப்புக்கு பின் தலிபான்களால் இன்றுவரை மோசமான சித்ரவதைகளை இந்த மக்கள் அனுபவித்து வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு ஆப்கான் போரில் கை ஓங்கியிருந்த தலிபான்கள், தங்களின் முக்கியக் குறியாக ஹசராக்களைத் தாக்கி அழித்தனர்.

**சோவியத் யூனியன் தலையீடு:**

சோவியத் யூனியனின் தலையீட்டால் பாப்ராக் கர்மாலின் கீழ் சோசலிச அரசாங்கத்தை உருவாக்கியதைத் தொடர்ந்து, ஹசாரா மக்களின் உரிமைகள் மேம்பட்டன.

சோசலிச கட்சியின் அரசியலமைப்பு ஆப்கானிஸ்தானில் அனைத்து இனங்களும் சமம் என்று அறிவித்தது. 1980களின் போது, இராணுவத்திலும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஹசாரா மக்கள் அதிக முக்கியத்துவம் பெற்றனர். மேலும் ஒரு ஹசாரா அரசியல்வாதியான சுல்தான் அலி கெஷ்ட்மண்ட் 1980 தசாப்தத்தின் பெரும்பகுதிக்கு பிரதமராக பணியாற்றினார். சோவியத்-ஆப்கான் போரில் ஹசாராக்கள் பெரும் பாலான நகர்ப்புற மக்கள் காபூலில் கம்யூனிஸ்ட் ஆட்சியை ஆதரித்து போராடினர். அவர்கள் அப்போது அதிகாரப்பூர்வமாக மற்றய இனங்களுடன் சமமாக இருந்தனர்.

**தலிபான்களால் தொடரும் சித்ரவதை:**

சோவியத் இராணுவ விலகலின் பின் 1990களில் தலிபான் தளபதியாக இருந்த மௌலாவி முகமது ஹனிஃப், ஹசாரார்கள் 'இஸ்லாமியர்களே அல்ல " என்று கூறியதாகவும் அறியப்படுகிறது. 1996-ல் தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய பிறகு ஹசராக்கள் போன்ற சிறுபான்மை இனங்கள் மற்றும் அந்த இனத்தின் பெண்கள் கடுமையான சித்திரவதைக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக, 1998-ல் ஆயிரக்கணக்கான ஹசராக்களை மசர்-ஐ-ஷரிஃப் நகரில் தூக்கிலிட்டனர். தலிபான் ஆட்சியின் போது (1996-2001), அரசாங் கம் குறிப்பாக ஹசாரா மக்களை துன்புறுத்துதலுக்கு மற்றும் இனப்படுகொலைக்கு இலக்காகக் கொண்டது. ஹசராக்களை தலிபான்கள் "விசுவாச மற்றவர்கள்" என்று கருதுவது உண்டு.


ஹசாரா இனத்தைச் சேர்ந்த ஆப்கன் எம்.பி ஒருவர் ஒருமுறை அந்நாட்டு நாடாளுமன்றத்தில், "ஹசாரா இன மக்களின் ஜனநாயக ஆதரவு, தலிபான்கள் பின்பற்றும் பழமைவாதத்துக்கு எதிராக இருப்பதால் அவர்கள் எங்களை அழிக்க நினைக்கிறார்கள்" என்றார். பின்னர் அவரும் காணாமல் ஆனார்.

**தலிபான்கள் தற்போதய ஆட்சி:**

ஆனால் இவையெல்லாம் முன்பு நிகழ்ந்தவை. தலிபான்கள் தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது சிறுபான்மை இனமான ஹசராக்களை அச்சம் கொள்ள வைத்துள்ளது. அதற்கேற்ப தலிபான்கள் இன்று அரசை அமைக்கும் முன்பாகவே ஹசராக்களை பயமுறுத்தும் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

கடந்த ஆண்டு ஜூலை 4 - 6 திகதிகளில் மாலிஸ்தான் மாவட்டம்- முண்டாரக்ட் கிராமத்தில் நடந்த கொலைகளின் கொடூரமான விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கப்பெற் றுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் கஸ்னி மாகாணத்தை கைப்பற்றிய பின்னர் 9 ஹசாரா ஆண்களை படுகொலை செய்ததாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. அத்துடன் பல பேர் கடும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

**தலிபான்களின் போர்க்குற்றங்கள்:**




அத்துடன் சாட்சியங்களை அழிக்கும் வகையில் அனைத்து கையடக்க மற்றும் புகைப்பட கருவிகளின் பயன்பாட்டை தடுத்தனர், இந்தக் கொலைகளின் ஊடாக கொடூரமான தாலிபானின் கடந்த கால நினைவூட்டுவதாகவும் தாலிபான் ஆட்சியின் எதிர்காலத்தையும் பிரதிப்பளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ஆயுத மோதலின் பின்னணியில் சித்திரவதை மற்றும் கொலை ஜெனீவா உடன்படிக்கைகளை மீறுகிறது. மேலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் பிரகடனத்தின் கீழ் போர்க்குற்றங்களாகவே தலிபான்களின் இத்தகைய வன்முறைகள் பதிவாகின்றன. சித்திரவதைகள் மற்றும் கொலைகள் குறித்து நேரில் கண்ட சாட்சிகளுடன் நேர்காணல்களை முன்னெடுத்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை , பல புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஆதராங்களை ஆய்வு செய்து வருகின்றது.

**ஹசாரா தேசியவாத இயக்கம்:**

ஹசாரா தேசியவாத இயக்கமானது ஹசாரா மக்கள் ஒரு தனித்துவமான தேசம் என்றும் அவர்களுக்கென ஒரு தேசிய-அரசுக்கு தகுதியானவர்கள் என்றும் கூறும் ஒரு இயக்கமாகும். ஆஸ்திரேலியா, பிரித்தானியா, ஸ்வீடன், நோர்வே, அமெரிக்கா, கனடா நாடுகளில் உள்ள ஹசாரா புலம்பெயர் மக்களிடமிருந்து கணிசமான ஆதரவை இந்த இயக்கம் பெறுகிறது.




ஹசாரா தேசியவாதிகள் ஈரானிய ஆட்சிக்கு எதிராக இருந்தாலும், ஹசாரா தேசியவாதிகள் ஈரானிடம் இருந்து நிதியுதவி பெற்றுள்ளனர் என பஷ்டூன் ஆதிக்கம் செலுத்தும் ஆப்கானிய அரசாங்கங்கள் பலமுறை குற்றம் கூறி வருகின்றன. ஹசாராவின் ஒற்றுமைக்கான அமைப்பு ஹசராஜத்தை தளமாகக் கொண்டது, இவ் அமைப்பின் நோக்கம் ஹசரஜாத் பகுதியில் அரசியல் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதாகும்.

தற்போது ஆப்கானிஸ்தான் ஹசாராக்கள் ஒரு சுதந்திர தேசத்தை நோக்கிய கோரிக்கைகள் எழுந்த வண்ணம் உள்ளன. தேசிய ஹசாரா அமைப்பு போராளிகள் ஆப்கானிய அரசாங்கத்திற்கு பதிலாக பெரும்பாலான தங்கள் பிரதேசங்களை கட்டுப்படுத்துகின்றனர். 2022 இல் மெஹ்தி முஜாஹித் தலைமையிலான பால்காப் எழுச்சிக்குப் பிறகு ஹசாரா தேசிய வாதத்தின் மறுமலர்ச்சி மீண்டும் ஏற்பட்டுள்ளது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |


கல்வி tv CHANNEL-1

**09.10.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**09.10.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருமலையில் எதிர்காலத்தில் தமிழர்கள் வாழக்கூடிய எந்த சந்தர்ப்பமும் இல்லை!

## சுட்டிக்காட்டுகிறார் கலையரசன் எம்.பி.

அம்பாறை, ஒக். 09

“தமிழர்களின் இதயமாக இருக்கின்ற திருகோணமலையில் எதிர்காலத்தில் தமிழர்கள் வாழக்கூடிய எந்த சந்தர்ப்பமும் இல்லை” என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை வளத்தாப்பிட்டியில் இடம்பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் தமிழர்கள் சார்ந்த பல பிரச்னைகள் உண்டு. தமிழர்கள் என்ற காரணத்தினால் எமது எல்லைக் கிராமங்கள், பல திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

அதன் விளைவுகளை நாங்கள் நாளுக்கு நாள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். மிகப் பெரியதொரு பின்னடைவின் பின்னர் தற்போது தான் எமது சமூகத்தில கல்வியாளர்கள் பலர் உருவாக்கப்பட்டு வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் எமது தமிழர் பிரதேசங்களிலே மௌனமான இன அழிப்பு நடந்தேறியது. எமது மக்கள் எதற்குமே வெளியில் வரமுடியாத சூழல் இருந்தது.

அவ்வாறான விடயங்கள் இன்று முள்ளிவாய்க்காலின் பின்னர் வெளியில் வந்தாலும் மேலும் பல விடயங்கள் அட்டூழியங்கள் எல்லாம் வெளிவராமலேயே இருக்கின்றன.

இன்றைய நிலையில் எமது சமூகத்திலே வெறுமனே கல்வியை மாத்திரம் நாங்கள் வளர்த்துவிட வேண்டியவர்களாக இருந்துவிட முடியாது.

எங்களுடைய சமூகத்தில ஒழுக்க விழுமியமுள்ள நல்ல இளைஞர்களை உருவாக்க வேண்டியவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம். தற்போதைய காலத்தில் மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களை மதிக்காமல் நடக்கின்ற சம்பவங்கள் பலவற்றைக் கண்டும் கேட்டும் இருக்கின்றோம்.

இவ்வாறே சென்றால் இந்த சமூகம் எதிர்காலத்தில் எவ்வாறு வாழப் போகின்றது என்கிற கேள்வி எம்முள் எழுகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் பொருத்தவரையில் முதன்மையான இனமாக இருந்தவர்கள் நாங்கள் ஆனால் இன்று இரண்டாம் நிலைக்குச் செல்லக்கூடிய ஒரு சூழல் வருகின்றது.

தமிழர்களின் இதயமாக இருக்கின்ற திருகோணமலையிலே எதிர்காலத்தில் தமிழர்கள் வாழக்கூடிய எந்த சந்தர்ப்பமும் இல்லை. திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அவர்கள் முற்றுகையிடும் நிலையே இருக்கின்றது.

அது மாத்திரமல்ல வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற பாலமாக இருக்கின்ற திருகோணமலை முல்லைத்தீவு எல்லைப் பகுதியைக் கூட ஆக்கிரமித்து எமது இருப்பை இல்லாமல் செய்கின்ற விடயங்களைச் சிங்களப் பேரினவாதம் நடைமுறைப் படுத்தி வருகின்றது.

அம்பாறையில் தமிழர்கள் இருந்திருக்கவில்லையா, அங்கு ஒரு மகாவித்தியாலயமும், ஆலயமும் எவ்வாறு வந்தது? ஆனால் தற்போது அங்கு மாணவர்களும் இல்லை, தமிழர்களும் இல்லை. இந்த அடிப்படைகளில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கின்ற நாங்கள் எமது மக்களின் இருப்புக்காகவும், பாதுகாப்பிற்காகவும் செயற்படுகின்றோம் - என்றார். (அ)

# அரசாங்கத்தின் மோசடிகளை மறைப்பதற்கு தீவிர முயற்சி!

## இரான் விக்ரமரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 09

அரசாங்கத்தின் மோசடிகளை மறைத்துக் கொள்ளும் ஒரு முயற்சியாகவே கோப் குழு தலைவர் பதவியை ஆளுங் கட்சியைச் சேர்ந்தவருக்கு வழங்கியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

பொதுநிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற குழுவுக்கு (கோப் குழு) பெரும்பாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களே தலைவர்களாக நியமிக்கப்படுவது சம்பிரதாயமாக இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கோப் குழுத் தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமரத்ன முன்னிறுத்தப்பட்ட போதும் அரசாங்கத்தின் சார்பில் முன்னிறுத்தப்பட்ட பேராசிரியர் ரஞ்சித் பண்டார உறுப்பினர்களிடையே நடந்த வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இரான் விக்ரமரத்ன, அரசாங்கம் சம்பிரதாயங்களை மீறி ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவரையே கோப் குழுவுக்கு தலைவராக நியமித்துள்ளது.

அதன் மூலம் அரசாங்கத்தின் மோசடிகளை மறைத்துக் கொள்ளும் தீவிர முயற்சியொன்று முன்னெடுக்கப்படுகின்றது.

கோப் குழுவின் அங்கத்தவர்களாக அரசாங்கத்தின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் கவனித்துப் பார்க்கும்போது இந்த விடயம் மேலும் உறுதியாகின்றது - என்றார். (அ)

# பண்டிகைக் காலத்தில் முட்டைக்கு தட்டுப்பாடு?

கொழும்பு, ஒக். 09

கிட்டத்தட்ட 50 வீத பண்ணை உரிமையாளர்கள் முட்டை உற்பத்தியை கைவிட்டுள்ளதாக அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையும் கால்நடை தீவனத் தட்டுப்பாடும் இதற்கு முக்கிய காரணம் என சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார். எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என அவர் கூறினார். (அ)



# யாழில் திருட்டுக்களில் ஈடுபட்ட வவுனியாவை சேர்ந்த நபர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் சுன்னாகம் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் சைக்கிள்கள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர்களை திருடிய ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியில் வைத்து சந்தேக நபர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் வவுனியா செட்டிக்குளத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்றும், சந்தேக நபரிடமிருந்து 10 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் 3 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மாற்றம் அவசியம்!

## வலியுறுத்துகிறார் நாமல்



கொழும்பு, ஒக். 09

தற்போதுள்ள அமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்றுக் கொள்கிறது என அந்தக் கட்சியின் பதில் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்து நிற்போம் - களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம் என்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு பங்களித்த இளம் தலைமுறையினரால் எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை என அவர் மேலும் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் ‘ஒன்றாக எழுவோம் - களுத்துறையில் இருந்து ஆரம்பிப்போம்’ என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டம் நேற்று காலை பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தனவின் களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கியதோடு, இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சோழர்கள் இந்துக்களா?...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னை வந்தது. அவரை முஸ்லீம்கள் கவர முயன் றார், கிறிஸ்தவர்களும்கூட. ஆனால், அவர் பௌத் தத்திற்கு சென்றார். தீண்டாமையிலிருந்து தப்பவும், அதே நேரத்தில், தொடர்ந்து இந்தியானாகவும் இருக்க அவர் அப்படி முடிவெடுத்தார். இந்துக்கள் பௌத்தத்தைத் தழுவுவதில் எந்தச் சிக்கலும் இல்லை. பாரதத்தைச் சேர்ந்த எந்தக் கலாசாரமும் பாரதீயமே. அதில் வி எச் பிக்கு எந்த பிரச்னையும் இல்லை” என்கிறார் ஜெயின். ஆர் எஸ் எஸ் மற்றும் பாஜகவின் கிளை அமைப்பே விஎச்பி. ஆம் ஆத்மி கட்சியின் புத்த மத மாற்றம் குறித்து விமர்சித்து வரும் பாஜக தலைவர்கள், ஜெயின் கருத்திலிருந்து சற்று தெளிவு பெறுவார்கள் என்று நம்புகிறேன். தென்னகத்து திராவிடத் தலைவர்கள் சிலர் கடுமையாக வட நாட்டு ஹிந்தி மொழி, இந்து மத எதிர்ப்பைக் கொண்டிருப்பதற்குச் சில பாஜக தலைவர்களின் கடுமையான ஹிந்துத்துவா போக்கும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஐநா சபையின் மனித உரிமை ஆணையத்தின் 51/L1/Rev1 தீர்மானம் குறித்து இந்த வாரம் உரையாட எண்ணியிருந்தேன். ஆனால், இது குறித்துப்பேச இலங்கையில் பல நிபுணர்கள் இருப்பார்கள் என்று எண்ணி அதைக் கைவிட்டேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம். •

# 200கிலோ ஹெரோயினுடன் ஈரானியர்கள் அறுவர் கைது!

கொழும்பு, ஒக். 09

ஈரானில் இருந்து கடல் வழியாக இலங்கைக்குக் கடத்திய தாகச் சந்தேகிக்கப்படும் 200 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்திய எல்லையூடாகச் சந்தேகத்துக்கிடமாக ஒரு விசைப்படகு பயணித்த வேளை இந்தியக் கடற்படையினர் அந்தப் படகைச் சோதனை செய்தனர். இதேபோதே இந்த 200 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் கேரள மாநிலம் கொச்சினை அண்டிய பகுதியிலேயே ஹெரோயின் சிக்கியுள்ளது.

இதை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 6 ஈரானியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## சர்வதேச,...

சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஜெனிவாவில் மீண்டுமொரு பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை இலங்கைக்கு பாரிய தோல்வியாகும்.

வெவ்வேறு சட்டங்களை பயன்படுத்தி பிரஜைகள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களே இதற்கு காரணமாகும்.

மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றமை, ஜனநாயக போராட்டங்கள் அடக்குமுறைகள் ஊடாக ஒடுக்கப்படுகின்றமை சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையின் மனித உரிமைகளை கேள்விக்கு உட்படுத்தியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் ஒத்துழைப்புக்களின்றி எம்மால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

ஆனால், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையானது, இவற்றிடமிருந்து கிடைக்கப்பெறவுள்ள உதவிகளில் பாதகமான தாக்கத்தைச் செலுத்தும்.

எனவே, அரசாங்கம் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கடன் மறுசீரமைப்பு, மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளிட்டவற்றை விரைவில் வெளிப்படுத்த வேண்டும்.

அத்தோடு ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

ஜனாதிபதிக்கு சர்வதேசத்தில் வரவேற்பு காணப்பட்டால், அவர் ஏனைய நாடுகளின் அரசாங்கங்களுடன் தொடர்பு கொண்டு அதன் மூலம் எரிபொருள் இறக்குமதியை முன்னெடுக்கலாம்.

அவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது மோசடிகளுக்கு வாய்ப்பு காணப்படாது.

19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை மீண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்தினால், அதற்கு எமது முழு ஒத்துழைப்பினை வழங்குவோம்.

எவ்வாறிருப்பினும், தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 22ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை.

மீண்டுமொரு முறை தன்னால் ஜனாதிபதியாக முடியாது என்பதனால் நிறைவேற்றதிகாரங்கள் அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி எண்ணுகின்றார்-என்றார். (அ)

## ஐ.நாவும்,...

கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழ் ஊடகங்களிடம் நேற்றுக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் புதிய தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் வரவேற்கின்றோம்.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமாக இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை இந்தத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

அதேசமயம் சாட்சியங்கள் சேகரிக்கும் பொறிமுறை அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும், விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இந்தத் தீர்மானம் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

இந்தநிலையில், புதிய தீர்மானத்திலுள்ள பரிந்துரைகளையும், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உள்ளிட்ட அதன் நாடுகளும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து இலங்கை அரசுக்குத் தொடர்ந்து கால அவகாசம் வழங்கி வந்தால் அதில் எந்தப் பயனும் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் இதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசும், அதன் படைகளும் எதிர்கொண்டுள்ளன. எனவே, குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இவை நிறைவேற ஐ.நாவையும், அதன் உறுப்பு நாடுகளையும் தமிழர்கள் நம்பியுள்ளார்கள் - என்றார். (அ)

## ஜனாதிபதி,...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில், ஒரு சிறந்த பாதைக்கு திரும்பியுள்ளதாக தாம் நம்புவதாக களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தார்.

"களுத்துறையில் இருந்து ஒன்றிணைவோம்" என்ற தொனிப்பொருளில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன மக்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

அங்கு மகிந்த மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை இன்று பல சவால்களை எதிர் கொண்ட போதிலும், அந்த சவால்களை வெற்றிகொள்ளும் பலம் கட்சிக்கு உள்ளது. நாட்டு மக்களுக்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் காப்பாற்றி வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

ஜனாதிபதி ஐ.தே.க.வைச் சேர்ந்தவர் என்பதாலேயே அப்போது அவரை திட்டினாலும், தற்போது அவர் சரியான பாதையில் செல்கிறார்.

ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதன் மூலம் இந்த பயணத்தை தொடர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாடுபடுகிறது-என்றார். (அ)

## வசந்த,...

தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோவுக்கு பெயர் தெரியாத கடிதம் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் செயற்பாட்டாளர் வசந்த முதலிகேவுக்கு எதிரான தண்டனையை மீள்பரிசீலனை செய்யுமாறு ஊடகங்களுக்கு முன்னர் தெரிவித்த ஆதிவாசிகளின் தலைவர் உருவரிகே வன்னில அத்தோ கடந்த 4ஆம் திகதி குறித்த கடிதத்தை பெற்றுக்கொண்டதாக கூறப்படுகிறது. வசந்த முதலிகேவின் சகோதரர் நேற்று ஊடகங்களுக்கு இந்தக் கடிதத்தை வெளிப்படுத்தியுள்ளார். (அ)

# தேவாலயங்களிலும் இன்று மின்விளக்குகள் அணைப்பு

கொழும்பு, ஒக். 09

மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஞாயிற்றுக்கிழமை மத வழிபாட்டிடங்களில் மின்விளக்குகளை ஒளிரவிடாமல் இருக்க பிக்குகள் எடுத்த தீர்மானத்திற்கு ஆதரவாக, தேவாலயங்களிலும் மின்விளக்குகளை அணைக்குமாறு கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித், தேவாலயங்களுக்கு அறிவித்துள்ளதாக அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

இதன்படி இன்று மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை பௌத்த வழிபாட்டிடங்களில் மின் விளக்குகள் அணைக்கப்படும் போது தேவாலயங்களும் மின்விளக்குகள் அணைக்கப்படும்.

கொழும்பு பேராயர் மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

அதிகரித்துள்ள மின் கட்டணத்தினால் மத ஸ்தலங்களும் பொது மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தினால் பொது மக்கள் மட்டுமின்றி மத வழிபாட்டுத் தலங்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த அடையாளப் போராட்டம் நடத்தப்படுவதாக அவர் தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டுப் பணவரவு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 09

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 325 மில்லியன் டொலர்களாக இருந்த வெளிநாட்டுப் பணியாளர்கள் அனுப்பிய பணம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 359.3 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும், இவ்வருடத்தின் ஜனவரி முதல் செப்டெம்பர் வரையில் வெளிநாட்டு பணியாளர்கள் அனுப்பிய பணம் 2,574.1 மில்லியன் டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# இலங்கை ஆயுதப் படைக்கு இந்தியா தொடர்ந்தும் பயிற்சி

கொழும்பு, ஒக். 09

சவாலான நேரங்களிலும், இலங்கை ஆயுதப் படைகளுக்கு இந்தியா தொடர்ந்து பயிற்சி அளிக்கும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, இந்த உறுதியை, அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது வழங்கியுள்ளார்.

இந்தியாவில் இராணுவ பயிற்சிகளை பெற்ற இலங்கை அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட இந்த நிகழ்வின் போது, பாதுகாப்புப் படைகளின் அதிகாரி சவேந்திர சில்வா உட்பட்ட பல உயர் இராணுவ அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்தியாவின் எப்போதும், "அண்டை நாடுகளுக்கு முதலில்" கொள்கைக்கு இணங்க, திறன் மேம்பாட்டில் இலங்கைக்கு உதவ இந்தியா உறுதி பூண்டுள்ளது.

இதன்கீழ் சவாலான நேரங்களிலும் கூட, இலங்கை ஆயுதப்படைக்கு இந்தியா தொடர்ந்து பயிற்சி அளித்து வருவதாக அவர் வலியுறுத்தினார்.

நிகழ்வில் உரையாற்றிய சவேந்திர சில்வா, இரண்டு நாடுகளையும் நட்பு, பரஸ்பர மரியாதை மற்றும் அக்கறையுள்ள அண்டை நாடுகளாக இணைப்பதில் தூதுவரின் முயற்சிகளைப் பாராட்டினார்.

ஆண்டுதோறும், இலங்கையின் சுமார் 1500 படையினருக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## எச்.ஐ.வி.,...

சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக நாட்டில் சமூகத்தில் இவ்வாறான நோய்கள் பரவும் அபாயம் பாரியளவில் காணப்படுவதாக கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## எரிபொருள்,...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் போதுமான அளவு சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் கையிருப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மசகு எண்ணெய் வாங்குவதற்கு தேவையான அந்நிய செலாவணி கிடைக்காததால் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன் தினம் முதல் மூடப்பட்டுள்ளது.

## பயங்கரவாதத்,...

குறித்த தகவல்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுமாறு பொலிஸாருக்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்துக்குள் இந்த தகவல்கள் வழங்கப்படாவிட்டால், இலங்கை பொலிஸார் மற்றும் தகவல் அதிகாரிக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாகவும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2019 முதல் நவம்பர் 2021 வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, அவர்களின் வயது, ஆண் மற்றும் பெண்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை கோரி, பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் அறியும் கோரிக்கை அனுப்பப்பட்டது.

அப்போது பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தர்ஷன் கல்லகே, சட்டத்தரணி கோரியுள்ள தகவல், சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் உள்ள தகவல் வகையுடன் தொடர்புடையது அல்ல என பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சட்டத்தரணி சுரேன் டி.பெரேரா தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையிலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை வெளியிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு ரயில் தடம் புரள்வு




கொழும்பு, ஒக். 09

காங்கேசன்துறையில் இருந்து, கோட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த உத்தரதேவி ரயில் தம்புத்தேகம மற்றும் சௌரத்கம ரயில் நிலையத்துக்கு இடையே தண்டவாளத்தில் இருந்து விலகி தடம் புரண்டது.

இதனால் 150 மீற்றருக்கு கொங்கிறீட் சிலிப்பர் கட்டைகள் சேதமடைந்தன.

ரயிலின் முன்பக்க இயந்திரப் பெட்டியும் மற்றுமொரு பெட்டியும் தடம் புரண்டுள்ளன. இதன் காரணமாக வடக்குப் பாதையில் ரயில் சேவை தடைப்பட்டது. (அ)

# ஹெரோயினுடன் கைதாகிய பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 09

கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளம் குடும்பப் பெண்ணை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த 26 வயதுடைய தாய் ஒருவரே நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 3 கிராம் 300 மில்லிக்கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கையிட்டனர்.

சந்தேக நபர் நேற்று யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேக நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் நீதிவான் நீதிமன்றினால் பிணை வழங்க முடியாது என சுட்டிக்காட்டிய மன்று வரும் 21ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (அ)




# பொதுஜன பெரமுன எதிர்ப்பினால் ‘22’ நிறைவேற்றப்படுவதில் சிக்கல்

கொழும்பு, ஒக். 09

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய முன்வைக்கப்பட்டுள்ள 22ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.**

அண்மையில் நடைபெற்ற ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் மட்ட கலந்துரையாடல்களின்போது 22ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, சரத் வீரசேகர, பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஆகியோர் இதன்போது திருத்தச் சட்டத்தை எதிர்த்து கடுமையான முறையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அதே போன்று அமைச்சர்கள் மட்ட கலந்துரையாடலின்போதும் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மாத்திரமே திருத்தச் சட்டத்தை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

எனினும் இரண்டரை வருடங்களின் பின்னர் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை வழங்கும் வகையில் உள்ளடக்கப்பட்டுள்ள சரத்து காரணமாகவே பொதுஜன பெரமுன கட்சியினர் திருத்தச் சட்டம் தொடர்பில் தீவிர எதிர்ப்பை வெளிக்காட்டுவதாக அறியக்கிடைத்துள்ளது.

அதன் காரணமாக எதிர்வரும் வாரம் திருத்தச் சட்ட வரைவு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டாலும் அதனை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான மாணவன் விடுதலை!

கொழும்பு, ஒக். 09

அனைத்துப் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயுடன் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 50 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஹஷான் ஜீவந்த குணதிலக்கவை விடுதலை செய்ய தங்காலை நீதவான் ஹேமந்த புஸ்பகுமார உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான், ஹஷான் ஜீவந்த குணதிலக்கவுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு போதிய உண்மைகள் இல்லை எனக் கூறி அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோருடன் கைது செய்யப்பட்ட ஹஷான் ஜீவந்த, பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

ஹஷான் ஜீவந்த தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ள பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், அவர் 50 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ள போதிலும், அவரை விடுதலை செய்யுமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கை பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய, பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் பேரவையின் அழைப்பாளர் வசந்த முதலிகே, ஹஷந்த ஜீவந்த குணதிலக்க மற்றும் வணக்கத்திற்குரிய கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோர் 90 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# சிறுமி மீது வன்புணர்வு; வயோதிபர் மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 09

பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வயோதிபரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலையில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் வயோதிபரினால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கர்ப்பமாகி உள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார் வயோதிபரை கைது செய்தனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் அவரை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சிறுமியை தாயாரின் பாதுகாப்பில் வைத்திருக்க அனுமதியளித்து நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த நிலையில் பதின்ம வயது சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டின் கீழ் முதியவர் நேற்று யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுபாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார்.

பிணை விண்ணப்பத்தை நிராகரித்த மன்று, சந்தேக நபரை நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (அ)




# VACANCY

## ACCOUNTS ASSISTANT

A group of companies engaged in Media, Communications, Network and publications looking for an Accounts Assistant in Jaffna District.

Candidate should have passed part II of AAT or finalist, CIMA/ACA II stages with at least 2 years Audit experience. Basic English knowledge an added advantage.

Abilities to operate MS Word, Excel and accounting packages a must.

Attractive remuneration and Allowances offered to the right candidate.

**Send your CV with recently captured photo to Email: johnny@askcable.lk**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.